RAMRAJ
காட்டன்
இந்தியாவின் கலாச்சாரம்

மலர் 10 • இதழ் 10 • ஏப்ரல் 2026 • விலை ரூ.18/-

# வெண்மை


தமிழ் மாத இதழ் VENMAI

எண்ணங்கள்

## நன்மதிப்பு

### சிறப்பிதழ்




RAMRAJ
CULTURE CLUB®
MATCHING DHOTIS • SHIRTS
Celebrate tradition in every colour
Available at Ramraj Showrooms & All Leading Textile Shops | Shop Online at www.ramrajcotton.in

RAMRAJ
காட்டன்
இந்தியாவின் கலாச்சாரம்

வாழ்வில் எல்லாச் செயல்களையும் நேர்த்தியாகச் செய்து
அத்தனை செயல்கள் மூலமும் நன்மதிப்பை வளர்த்து
நற்பெயர் சம்பாதித்து நிறைவாக வாழ வழிகள் சொல்லும்

# நன்மதிப்பு

## சிறப்பிதழ்

**என்ற இந்த இனிய நூலை வழங்குவதில்**
**பெருமிதம் கொள்கிறோம்.**




# மதிப்பிற்குரியவர்களுக்கு...

**வணக்கம்.**

‘நன்மதிப்பை உருவாக்குவதற்கு 20 வருடங்கள் ஆகும். அதைக் கெடுப்பதற்கு 5 நிமிடங்கள் போதும்’ என்றார், உலகின் சக்தி வாய்ந்த மனிதர்களின் நன்மதிப்பைப் பெற்ற வாரன் பஃபெட். சமூக வலைதளங்கள் அசுர வளர்ச்சி பெற்றிருக்கும் இன்றைய சூழலில், ஒருவர் எந்த உள்நோக்கமும் இல்லாமல் சாதாரணமாகப் பேசிய விஷயங்களையே அவருக்கு எதிராகத் திருப்பி, அவரின் நன்மதிப்பைக் கெடுக்கும் சம்பவங்களைக் கண்கூடாகப் பார்க்கிறோம்.

வியத்தகு சாதனைகளைச் செய்த பில் கேட்ஸ் போன்ற பெரிய ஜாம்பவான்களுக்கே, குரு ஸ்தானத்தில் இருப்பவர் வாரன் பஃபெட். உலகப் பெரும் பணக்காரர்களின் பட்டியலில் முதல் பத்து இடங்களில் எப்போதும் இருப்பவர். இந்தப் பட்டியலில் அவர் முதல் இடம் பிடித்தது தொடங்கி பல ஏற்ற இறக்கங்களைச் சந்தித்துக்கொண்டே இருக்கிறார். ஆனால், எப்போதும் அவருக்கான நன்மதிப்பில் இறக்கம் இருந்ததே இல்லை என்பதே அவரின் தனிச்சிறப்பு.

தன்னிடம் இருக்கும் பெரும் செல்வத்தைவிடத் தன்மீது மற்றவர்கள் வைத்திருக்கும் நன்மதிப்பைச் சிறந்த செல்வம் என்று கருதுபவர் பஃபெட். தான் வாழ்நாள் முழுக்கச் சம்பாதித்த செல்வத்தின் பெரும்பகுதியை அறப்பணிகளுக்காக அளித்தவர். அதனால் அவரது நன்மதிப்பு மேலும் மேலும் உயர்ந்துகொண்டே போகிறது. ‘‘வாழ்நாளில் ஒருவர் சம்பாதிக்க வேண்டியது பணத்தை மட்டுமல்ல, நன்மதிப்பையும்தான்’’ என்று வலியுறுத்தும் வாரன் பஃபெட், 95 வயதிலும் உழைத்துக் கொண்டிருப்பவர். அவரின் இந்தக் கருத்து அறிவுரை மட்டுமல்ல, நீண்ட நெடிய வாழ்க்கைப் பயணத்தின் அனுபவம்.



நாம் சம்பாதிக்கும் பணத்தை ஏதேதோ காரணங்களால் இழந்தாலும் மீண்டும் சம்பாதித்துவிட முடியும். ஆனால் ஒருமுறை இழந்த மதிப்பை மீட்டெடுப்பது எளிதல்ல. அப்படியே மீட்டு எடுக்க வேண்டும் என்று நினைத்தாலும், அதை நல்ல எண்ணங்களாலும், நல்ல செயல்களால் மட்டுமே மீட்க முடியும் என்பதற்கு உலகப் புகழ்பெற்ற நோபல் பரிசு அறக்கட்டளை நிறுவனர் ஆல்ப்ரட் நோபல் அவர்களின் வாழ்வே சிறந்த உதாரணம்.

உலகத்திலேயே மதிப்புமிக்கது நோபல் பரிசு. பெரும் தேசங்களின் ஆட்சியாளர்கள்கூட அதை அடைவதற்கு ஏங்குகிறார்கள். அந்த அளவுக்கு மதிப்பானது. ஆனால் அந்தப் பரிசு, இழந்துபோன நன்மதிப்பை மீட்டு எடுக்கவே ஒருவரால் உருவாக்கப்பட்டது. இயற்பியல், வேதியியல், பொருளாதாரம், இலக்கியம், உலக அமைதி என உலகம் முழுவதும் உச்சம் பெற்ற அறிஞர்களைக் கௌரவிக்க நோபல் பரிசு வழங்கப்படுகிறது. தங்கள் பங்களிப்பின் மூலமாக உலகம் போற்றும் சாதனை படைத்த அறிஞர்களின் மதிப்பு, நோபல் பரிசு மூலமாக மேலும் மேலும் உயர்கிறது. ஆல்ப்ரட் நோபல் என்பவர் தன் பெயரில் நோபல் ஃபவுண்டேஷன் என்கிற அறக்கட்டளையைத் தொடங்கி, வாழ்நாள் முழுவதும் உழைத்து தான் சேர்த்த பெரும் செல்வத்தை அந்த நோபல் அறக்கட்டளைக்குக் கொடுத்துவிட்டார். அதற்கான காரணம், ஒரு மனிதனுக்கு நன்மதிப்பு எவ்வளவு அவசியம் என்பதை உணர்த்தும்.


சுவீடன் நாட்டைச் சேர்ந்த அறிவியல் அறிஞரான ஆல்ப்ரட் நோபல், மோசமான பாதிப்புகளை ஏற்படுத்தும் ‘டைனமைட்’ எனும் வெடிமருந்தைக் கண்டுபிடித்தார். போரில் பயன்படுத்தும் எல்லா வெடி ஆயுதங்களுக்கும் அதுவே அடிப்படையாக மாறியது. உலகப்போர்களில் அவரின் டைனமைட் வெடிமருந்து கண்டுபிடிப்புதான், அதற்கு முன்பு இல்லாத அளவுக்குப் பெரும் உயிர்ச்சேதங்களை உண்டாக்கியது. அதனால் அவரை ‘மரண வியாபாரி’ என்று அழைத்தனர். இந்த விஷயம் நோபலுக்குத் தெரியாது.

1888–ம் ஆண்டு அவர் உடல்நிலை சரியில்லாமல் இருந்தபோது, அவர் இறந்துவிட்டார் என வதந்தி கிளம்பியது. அதை செய்தியாக்கிய பத்திரிகைகள், 'மரண வியாபாரி இறந்தார்' என்று அதற்குத் தலைப்பு வைத்தன. தான் இறந்துவிட்டதாக வெளியான செய்தியைத் தானே படிக்கும் இக்கட்டான நிலை அவருக்கு ஏற்பட்டது. அதன் தலைப்பைப் பார்த்து அவர் அதிர்ந்தார். 'நான் இறந்த பிறகு உலகம் என்னை இப்படியா ஞாபகம் வைத்துக்கொள்ளப் போகிறது?' என்று நினைத்து வருந்தினார். 'மரண வியாபாரி' எனும் அவப்பெயர் தனக்கு மட்டுமின்றி, தன் அடுத்தடுத்த தலைமுறைகளுக்கும் தீராத அவமானத்தை உருவாக்கும் என்பதை உணர்ந்தார். நன்மதிப்பு இல்லாமல், தான் சேர்த்து வைத்த பணத்திற்கு எந்த மதிப்பும் இல்லை என்பதை அறிந்தார். பிறருக்குத் தீமை தரும் தன் செயல் மூலம் தனக்கு ஏற்பட்ட நிரந்தர அவப்பெயரை, தன் நல்ல செயல்கள் மூலம் மாற்ற நினைத்தார். உலகம் தன்னை ஆக்கப்பூர்வமான செயல்களுக்காக நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும் என முடிவெடுத்தார்.



வருங்காலத் தலைமுறை தன்னை மரணத்தின் வியாபாரி என அடையாளம் காட்டுவதை அவர் விரும்பவில்லை. தீமையை நன்மையால்தான் வெல்லமுடியும் என்பதை அறிந்து நோபல் அறக்கட்டளையை உருவாகினார். அதன் சட்ட திட்டங்களைக் கடுமையாக வகுத்து, உலகின் சிறந்த சாதனையாளர்களுக்கே நோபல் பரிசு வழங்கப்பட வேண்டும் என்பதைச் செயல்திட்டமாக நிறுவினார்.

போர் என்பது அப்பாவி மக்களைக் கொன்று குவிப்பதோடு, மக்களின் வாழ்வாதாரங்களை அழித்துப் பல தலைமுறைகளுக்கு நிரந்தரப் பாதிப்பை உருவாக்குகிறது என்பதை உணர்ந்த அவர், உலக அமைதிக்குப் பாடுபடுகிற தலைவர்களுக்கும், உயிர் காக்கும் கண்டுபிடிப்புகளைச் செய்கிற அறிஞர்களுக்கும் நோபல் பரிசு கிடைக்க தொலைநோக்கோடு செயல்பட்டார். உயிர்களைப் பலிவாங்கிய கண்டுபிடிப்பை உருவாக்கியபோது, உலகம் அவரை மரண வியாபாரியாக அறிந்துகொண்டது. தவறை உணர்ந்து அவர், போர் ஒழிந்து அமைதி தழைக்க வேண்டும் என எண்ணிச் செயல்பட்ட பிறகு, அவருடைய பெயரே மற்றவர்களுக்கு மதிப்பை உருவாக்கும் அளவுக்கு நன்மதிப்பைப் பெற்றது.



The Culturepreneur

நமது எண்ணங்களும் செயலும்தான் நம் மீதான நன்மதிப்பை உயர்த்துவதற்கு அடிப்படையாக இருக்கின்றன. ஒரு தந்தையின் மதிப்பு மிகுந்த செயல், அவரின் குடும்பத்தாரைத் தலைநிமிரவும், அவர் சார்ந்த அனைவரையும் பெருமைப்படவும் வைக்கிறது. ஒரு தந்தையின் செயல் மதிப்பைக் குலைப்பதாக இருந்தால், அவரைச் சார்ந்த அனைவரையும் தலைகுனியச் செய்யும். சக மனிதர்கள் நம்மை எப்படி நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும் என்பதை நாம்தான் முடிவு செய்கிறோம்.

நமது பாரம்பரிய உடையான வேட்டியின் மதிப்பை மீட்டு எடுப்பதும், வேட்டி உடுத்துபவர்களை மதிப்புக்குரியவர்களாகக் கருதி அனைவரும் சல்யூட் வைக்க வேண்டும் என்பதும்தான், ராம்ராஜ் காட்டன் நிறுவனத்தின் தாரக மந்திரமே. நம் பண்பாட்டு உடைக்கும், அதை உடுத்துபவர்களுக்கும் மதிப்பு கூட வேண்டும் என்பதே எங்களின் நோக்கம். ராம்ராஜ் காட்டன், தொடர்ந்து 40 ஆண்டுகளுக்கும் மேலாகச் சமரசம் இல்லாமல் உழைத்து வேட்டியின் நன்மதிப்பை உயர்த்தி இருக்கிறது. நிறுவனமும் அதன்கூடவே வளர்ந்திருக்கிறது. இதுவே மதிப்பான வளர்ச்சி.

தன் வார்த்தைக்கும், வாழ்க்கைக்கும் எவ்விதமான வித்தியாசமும் இல்லாமல் வாழ்ந்தார் என்பதால்தான் மகாத்மா காந்தியைத் தன்னிகர் இல்லாத தலைவராக வரலாறு போற்றுகிறது. தன்னைச் சிறையில் அடைத்துக் கொடுமை செய்தவர்களுக்கும் மன்னிப்பை வழங்கிய நெல்சன் மண்டேலா, ஒப்பற்ற மனிதராக இறந்தும் வாழ்கிறார். நம் குழந்தைகளுக்கு விலைகொடுத்து வாங்க முடியாத பெருஞ்செல்வம் நன்மதிப்பு என்பதைச் சொல்லி வளர்ப்போம். ஏனெனில் மதிப்பைத் தேடித்தரும் நல்ல எண்ணங்களும், நல்ல செயல்களும் நம் பிள்ளைகளுக்கு எப்போதும் பாதுகாப்பு அரண்களாக விளங்கும்.

அனைவருக்கும் இனிய சித்திரைத் திருநாள் நல்வாழ்த்துகள்.

குரு அருள்

வாழ்க வையகம்... வாழ்க வளமுடன்!

**கே.ஆர்.நாகராஜன்**

நிறுவனர் – ராம்ராஜ் காட்டன்

# செயல்களால் சம்பாதிக்கலாம் நன்மதிப்பு!




சிறிய அளவில் வணிகம் செய்துவருபவர் கணேஷ். தனக்குச் சரக்குகள் அனுப்பிய மொத்த வியாபாரிக்கு இன்று அவர் தர வேண்டிய தொகை நான்கு லட்சம் ரூபாய். தன்னிடம் கடனுக்குப் பொருட்கள் வாங்கிச் சென்ற பலரும் பணத்தைத் திருப்பித் தராத சூழலில், இந்தப் பணத்தைக் கொடுக்க இயலாமல் தடுமாறினார் அவர். வேறு வழியின்றி நகையை எடுத்துவந்து வங்கியில் அடமானம் வைத்தார்.

வங்கியில் அதிகபட்சமாக 3 லட்சத்து 60 ஆயிரம் ரூபாய் மட்டுமே தர முடியும் என்றார்கள். 'சரி' என்று நகையைக் கொடுத்து ரசீது வாங்கிக்கொண்டு கேஷியரிடம் போய் நின்றார். மனம் முழுக்க, 'மீதி 40 ஆயிரம் ரூபாய்க்கு என்ன செய்யலாம்' என்ற சிந்தனையிலேயே இருந்தது. கேஷியர் கொடுத்த பணத்தை வாங்கி எண்ணிப் பார்க்காமல்கூடப் பையில் வைத்து எடுத்து வந்துவிட்டார்.

கடைக்கு வந்து எண்ணிப் பார்த்தால் 20 ஆயிரம் ரூபாய் அதிகமாக இருந்தது. 60 என்பதைச் சரியாகக் கவனிக்காமல் 80 என நினைத்துக்கொண்டு கேஷியர் கொடுத்திருக்கலாம் என்பது அவருக்குப் புரிந்தது. 'நிறைய பேர் வந்து போகும் வங்கியில் என்னிடம் தவறாகக் கொடுத்தது கேஷியருக்குத் தெரிய வாய்ப்பில்லை. இன்றைக்கு இருக்கும் சூழலில் கடவுளாகப் பார்த்து நமக்கு உதவி செய்திருக்கிறார்' என்று அவர் நினைத்துக்கொண்டார்.

இன்னொரு பக்கம் குற்ற உணர்வு அவரை உறுத்தியது. 'இது நம் பணம் இல்லை. இதைச் சொந்தம் கொண்டாடுவது தவறு. இந்தக் கவனக்குறைவால் கேஷியர்தானே பாதிக்கப்படுவார்? நம்மிடம் தவறுதலாக அதிக பணம் வாங்கிவிட்ட ஒருவர் திருப்பிக் கொடுக்க வேண்டும் என்றுதானே எதிர்பார்ப்போம்' என மனசாட்சி அவரை உறுத்தியது.

இந்த மனப்போராட்டத்தில் சில நிமிடங்கள் அல்லாடிய கணேஷ், உடனடியாக எழுந்து வங்கிக்கு நடந்தார். தன்னிடம் அதிகமாகத் தரப்பட்ட 20 ஆயிரம் ரூபாயை கேஷியரிடம் திருப்பிக் கொடுத்தார். கேஷியர் எழுந்து நின்று அவருக்கு நன்றி சொன்னார். கணேஷ் அவரைப் பார்த்துச் சிரித்தபடி, "நான்தான் உங்களுக்கு நன்றி சொல்ல வேண்டும். என்னை ஒருமுறை சுயபரிசோதனை செய்துபார்த்து, என் மனசாட்சிக்கு நேர்மையாக நடந்துகொள்வதற்கு இந்தப் பணம் எனக்கு உதவியது" என்று சொல்லிவிட்டு நடந்தார் கணேஷ்.


நேர்மையாக இருப்பதற்குப் பெரிதாகப் பரிசோ, அங்கீகாரங்களோ எல்லாச் சூழல்களிலும் கிடைத்துவிடப் போவதில்லை. ஆனால், நேர்மையாக இருப்பதே ஒரு பரிசுதான். மனதுக்குள் எழும் பேராசையை, குழப்பத்தை, சலனத்தை அடக்கிவிட்டு நேர்வழியில் நடப்பது என்பது சாதாரண விஷயம் இல்லை. அதற்கான சூழல்கள் வாய்க்கும்போது நம் நன்மதிப்பு வெளிப்படுகிறது. அதுவே ஒருவருக்கு வாழ்க்கையில் அமைதியையும் நிம்மதியையும் கொடுக்கும்.

வேலை, தொழில், வியாபாரம் என்று சமூக வாழ்க்கையில் இப்படி ஒருவருக்கு நன்மதிப்பைக் கொடுக்கும் சிறந்த பண்புகள் எவை?

**நேர்மை:** சமூக விதிகளை மதித்து நேர்மையாக நடக்கும் ஒருவர், எவரையும் ஏமாற்ற மாட்டார். தவறாக வழிநடத்த மாட்டார். சொன்ன சொல்லைக் காப்பாற்றுவார். நேர்மையான ஒரு பணியாளர், தன் பலத்தையும் பலவீனத்தையும் உணர்ந்து, அதற்குப் பொருத்தமான வேலையையே சரியாகச் செய்வார். நேர்மையான ஒரு வியாபாரி, தன் வாடிக்கையாளர்களிடம் சொன்ன சொல்லைக் காப்பாற்றுவார். நேர்மையாகத் தொழில் செய்யும் ஒருவர், தரமான பொருட்களை மட்டுமே உருவாக்கித் தர நினைப்பார். நேர்மையாக இருக்கும் ஒருவர், தன் நன்மதிப்பை உணர்ந்து, அதற்குப் பொருத்தமான முடிவுகளை மட்டுமே எடுப்பார்.

**பொறுப்பு:** மதிப்பான மனிதர் ஒருவர், தன் நடத்தையை எல்லோரும் கவனிக்கிறார்கள் என்பதை அறிந்திருப்பார். தன் முடிவுகளால் ஏற்படும் விளைவுகளை அறிந்து முடிவுகளை எடுப்பார். சரியான முடிவுகளை எடுத்து, தன்னைச் சுற்றி இருப்பவர்களுக்கு உயர்வு கொடுப்பார். தான் எடுக்கும் தவறான முடிவுகளால் ஏற்படும் விளைவுகளுக்குப் பொறுப்பேற்பார். அவரது நடவடிக்கைகளில் எந்த மர்மமும் இருக்காது. எல்லாவற்றையும் வெளிப்படையாகச் செய்வார்.

**கண்ணியம்:** எந்த ஒரு சூழலிலும் தனக்குத் தனிப்பட்ட ஆதாயம் எதையும் தேடாமல், விதிகளையும் சட்டதிட்டங்களையும் மதித்தே முடிவுகள் எடுப்பார். யாரும் அங்கீகாரம் தராவிட்டாலும், தன்னைச் சுற்றியுள்ள பலர் விரும்பாதபோதிலும், எப்போதும் சரியான முடிவுகளையே எடுப்பார். அதுவே அவரது அடையாளமாக இருக்கும்.



**மரியாதை:** சமூகத்தின் எந்த நிலையில் இருப்பவர்களையும் வித்தியாசம் பார்க்காமல் மரியாதையாக நடத்துவார். எவரையும் அன்பும் கருணையுமாக அணுகுவார். அடுத்தவர்களின் சூழலைப் புரிந்துகொண்டு, அவர்கள் சொல்வதைக் கேட்பார். 'இவர் இப்படித்தான்' என்று முத்திரை குத்தி எவரையும் பாரபட்சமாக நடத்த மாட்டார். எதையும் திறந்த மனதுடன் அணுகுவதும், அக்கறையுடன் கேட்பதும் அவரது குணங்களாக இருக்கும்.

**நடுநிலை:** ஒருவர் எப்படிப்பட்ட பின்னணியிலிருந்து வருகிறார், அவர் எப்படிப்பட்ட அந்தஸ்தில் இருக்கிறார் என்றெல்லாம் பார்க்காமல் எல்லோருக்கும் தாங்கள் நினைத்ததைச் செய்துபார்க்க வாய்ப்புக் கொடுப்பார். அப்படி இருக்கும் ஒரு சூழலில், நிறைய வளர்ச்சிகள் நிகழும். ஒரு நிறுவனத்தில் வேலைபார்க்கும் எல்லோருக்கும் அவர்களின் உயர் அதிகாரி இப்படி வாய்ப்புக் கொடுத்தால், அந்த நிறுவனம் வளர்ச்சி அடையும். வேலை பார்ப்பவர்களும் வளர்ச்சி பெறுவார்கள். தொழில், வியாபாரம் என எல்லா இடங்களிலும் இப்படி வளர்ச்சி சாத்தியமாகும்.

**துணிச்சல்:** தனக்கு எது சரி என்று தோன்றுகிறதோ, அந்த முடிவைத் துணிச்சலுடன் எடுப்பார். அது கடினமான முடிவாக இருக்கலாம். நிறைய பேர் அதை எதிர்க்கலாம். ஆனால், 'இதுதான் நியாயம். சட்டப்படி இதைத்தான் செய்ய வேண்டும்' என்று துணிச்சலுடன் அந்த முடிவில் உறுதியாக இருப்பார். ஒரு நிறுவனத்தில், தொழிலில், வியாபாரத்தில், தனது தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளைத் தாண்டி, 'இதுதான் சரி' என்று நியாயத்தின் பக்கம் நின்று முடிவுகள் எடுக்கும் ஒருவருக்கு நன்மதிப்புக் கிடைக்கும்.

**சிறப்பு:** எவரும் நூறு சதவிகிதம் கச்சிதமானவர்கள் கிடையாது. தவறுகள் செய்வது எல்லோருக்கும் இயல்பு. அதைத் தாண்டி, எப்போதும் ஒருவர் மிகச்சிறப்பாகத் தனது பணிகளைச் செய்ய வேண்டும். நிறைய கற்றுக்கொண்டு, தன்னை இன்னும் இன்னும் மேம்படுத்திக்கொண்டு உழைக்கும் ஒருவருக்கே இது சாத்தியமாகும். 'நேற்றைவிட இன்று சிறப்பாக என் உழைப்பைக் கொடுக்கிறேன்' என்று இருக்கும் எவரும் நன்மதிப்புப் பெறுவார். ●



## சகித்துக்கொள்வதே நன்மதிப்பு!

ஒருவர் உங்களுக்குப் பிடிக்காத விஷயங்களைச் செய்து எரிச்சலூட்டிக்கொண்டே இருக்கிறார். ஒருவர் உங்களைக் காரணமே இல்லாமல் திட்டுகிறார். என்ன செய்ய வேண்டும்? இந்தக் கேள்விக்கு, 'சகித்துக்கொள்ளுங்கள்' என்று பதில் சொல்கிறார் அறிஞர் சாக்ரடீஸ்.

ஒருமுறை சாக்ரடீஸ் ஒருவனுடன் விவாதத்தில் ஈடுபட்டார். சாக்ரடீஸ் சொன்ன அறிவார்ந்த கருத்துகளுக்குப் பதில் சொல்ல முடியாத அவன், ஒருகட்டத்தில் சாக்ரடீஸைத் திட்ட ஆரம்பித்தான். மோசமான வார்த்தைகளால் அவரைக் கண்டபடி திட்டிவிட்டுத் தாக்கவும் வந்தான். அறிவார்ந்த விவாதங்களில் சரளமாகப் பேசிய சாக்ரடீஸ், இப்போது அமைதியாகிவிட்டார். அவனுடன் சண்டை போடவே இல்லை. சாக்ரடீஸின் அமைதியைப் பார்த்து, அவர் விவாதத்தில் தோற்றுவிட்டதாகக் கருதி அவன் திரும்பிப் போய்விட்டான்.

சாக்ரடீஸின் சீடர்களால் இதைப் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. "உங்களை அவமானப்படுத்திய அவனைச் சும்மா விட்டிருக்கக் கூடாது. அடிக்க வந்தவனை நாமும் அடித்திருக்க வேண்டும்" என்றார்கள். "ஒரு கழுதை உங்களைத் தவறுதலாக உதைத்தால், நீங்கள் திருப்பி உதைப்பீர்களா? முட்டாள்களின் நிலைக்குக் கீழே இறங்கி நம்மைத் தரம் தாழ்த்திக்கொள்ளக் கூடாது. சகித்துக்கொண்டு கடந்துவிட வேண்டும். சில நேரங்களில் பேசுவதால் நமக்கு மதிப்புக் கிடைக்கும். சில நேரங்களில் மௌனமாக இருப்பது அதைவிட அதிக நன்மதிப்பைக் கொடுக்கும்" என்றார் சாக்ரடீஸ்.

எப்போது அமைதியாக இருப்பது என்பதையும் கற்றுக்கொள்ள வேண்டும்.

## பார்வையில் மதிப்பு!

ஒரு வீட்டில் புதுமனைப் புகுவிழா. சடங்குகள் முடிந்ததும், வாசலில் கட்டியிருந்த வாழை மரங்களை அப்படியே விட்டுவிட்டுப் போகிறார்கள்.



## நம்பினால் கிடைக்கும் மதிப்பு!

இரண்டு கொய்யாக்கள் ஒரே மரத்தின் ஒரே கிளையில் ஒன்றாகத் தொங்கிக்கொண்டிருக்கின்றன. அவற்றில் ஒன்று பழுத்துவிட்டது, அதை இன்றே பறித்துச் சாப்பிடலாம். மற்றொன்று இன்னும் பிஞ்சாக உள்ளது. அதனால் அது மதிப்பில்லாததா? இல்லை, அது பழுக்க அதிக நேரம் தேவைப்படலாம், அவ்வளவுதான்!

இயற்கை தரும் பாடம் இது. நம்மைச் சுற்றியிருக்கும் மற்றவர்கள் வெற்றி பெறலாம். நமக்கு அது கைகூடவில்லை எனில், நாம் வெற்றிபெறவில்லை என்று அர்த்தம் இல்லை. நமக்குச் சரியான நேரம் இன்னும் வரவில்லை என்றுதான் அர்த்தம். நினைவில் கொள்ளுங்கள், நமக்கான நேரம் வரும். அதுவரை பொறுமையும் விடாமுயற்சியும் தேவை. கொய்யா பழுப்பதற்காகக் கிளையில் தொங்குவதைப் போல் அல்லாமல், சரியான திசையில் சரியான அளவு முயற்சி எடுத்தால் நமக்கான வெற்றி கிடைக்கும், மதிப்பும் வரும்.



ஒருவர் வந்து அதிலிருந்து வாழைக்காய்களை மட்டும் வெட்டிப் போகிறார். இன்னொருவர் வந்து வாழை இலைகளை வெட்டிச் செல்கிறார். அடுத்தவர் வந்து மட்டைகளைப் பிய்த்துப் போட்டுவிட்டு வாழைத்தண்டைச் சமைக்க எடுத்துப் போகிறார். கடைசியாக வந்த ஒருவர் அந்த வாழை மட்டைகளை எடுத்துப் போய், அதிலிருந்து நாரைப் பிரித்தெடுத்து, அதைக் கலந்து அழகிய புடவை நெய்கிறார். குப்பையில் தூக்கிப் போட்ட வாழைமட்டை, எல்லாவற்றையும்விட மதிப்பானதாக மாறுகிறது. யார் பார்வையில் நாம் எப்படித் தெரிகிறோம் என்பதில் கிடைக்கும் நமக்கான நன்மதிப்பு.



## மதிக்கவில்லையா?

''என்னை ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை" என்று சிலர் குறைபட்டுக் கொள்வார்கள். இங்கு மதித்தல் என்பது மதிப்பு ஆகாது. அங்கீகாரம் எனலாம். தன் இருப்பைக் கண்டுகொள்ளவில்லை என்பதை அப்படிக் கூறுகின்றனர். அழைப்பிதழ் பெற்ற ஒரு திருமணத்துக்குச் செல்கிறோம். கூட்டம் அதிகம். நம்மை அழைத்தவர் வந்து வரவேற்கவில்லை. திருமண மேடையிலேயே இருக்கிறார். அங்கே அவரிடம் சில நொடிகள்கூடப் பேச முடியவில்லை. அடுத்த விருந்தினர் வந்துவிடுகிறார். 'வீடுதேடி வந்து அழைத்தவர்கள் சரியாக மதிக்கவில்லை, உபசரிக்கவில்லை' என்று நெருடல் கொள்ளத் தேவையில்லை. சூழல் கருதி நம் முக்கியத்துவத்தை விட்டுக்கொடுக்க வேண்டும்.



## மதிப்பாக இருங்கள்!

வைரம் ஏன் மதிக்கப்படுகிறது தெரியுமா? அது அரிதாகக் கிடைப்பது என்பதால்! நீங்களும் அரிதானவராக மாறலாம். அதற்கு ஐந்து வழிகள்:

- தினமும் கிடைக்கும் சூரிய ஒளியை யாரும் அதிகம் மதிப்பதில்லை. எப்போதாவது வரும் மழையைத்தான் மதிக்கிறார்கள். அதற்காகக் காத்திருக்கிறார்கள். உங்கள் நேரத்தையும் சக்தியையும் யாருக்கு எவ்வளவு கொடுக்க வேண்டும், எப்போது கொடுக்க வேண்டும் என அளவு வைத்திருங்கள். எல்லாருக்கும் எப்போதும் கிடைத்தால், அந்த நன்மையின் மதிப்புக் குறைந்துவிடும். அரிதானவராக இருங்கள்.

- 'இவர் எங்கே போய்விடப் போகிறார், நம்முடன்தான் இருப்பார்' என்று ஒருவரைப் பற்றி நினைப்பு வந்துவிட்டால், அவருக்கு மதிப்புக் கிடைக்காது. கூப்பிடும் எல்லா நேரத்திலும் வருபவருக்கும் மதிப்பு இருக்காது. உங்களை நேசிப்பவரின் அருகில் இருங்கள், கூப்பிடும் எவர் குரலுக்கும் காது கொடுங்கள். முழுமையாக உங்கள் உணர்வுகளைக் கொடுங்கள். ஆனால், அந்தக் கடமை முடிந்ததும் நகர்ந்துவிடுங்கள்.

- அடுத்தவர்களுக்கு உதவி செய்வது நல்ல பழக்கம்தான். ஆனால், எப்போதும் உங்களையே சார்ந்து இருக்கும் நிலையை எவருக்கும் ஏற்படுத்தாதீர்கள். அது உங்கள் மீது சுமையாக ஏறிவிடும். 'இவர் நமக்கு உதவி செய்யக் கடமைப்பட்டவர்' என எவரும் நினைத்துவிடக்கூடாது. உங்களை அப்படி யாரும் பயன்படுத்திக்கொள்ள அனுமதிக்காதீர்கள்.

- மூங்கிலும் ஒருவகை புல்தான். ஆனால், எல்லா இடங்களிலும் வளரும் சாதாரண புல்லுக்கு மதிப்பு இல்லை; மூங்கில் மதிக்கப்படுகிறது. எல்லா விஷயத்திலும் கருத்துச் சொல்கிறீர்களா? எல்லா இடங்களுக்கும் போய்விடுகிறீர்களா? அது உங்கள் மதிப்பைக் குறைக்கிறது. சரியான நேரத்தில் பேசுங்கள். சரியான விஷயங்களில் கலந்துகொள்ளுங்கள். அரிதாக வருபவரே கவனிக்கப்படுவார்.

- 'இதை இவரால் மட்டுமே செய்ய முடியும்' என்ற அளவுக்கு ஏதோ ஒரு செயலில் மிகச்சிறந்த திறமை பெறுங்கள். 'இதை யார் வேண்டுமானாலும் செய்யலாம்' என்ற நிலையில் இருப்பவரை எப்போது வேண்டுமானாலும் வேறொருவர் வந்து நிரப்பி விடுவார். திறமையை வளருங்கள், அறிவை ஆழப்படுத்துங்கள், அனுபவத்தைக் குவியுங்கள். யாராலும் இவர் இடத்தை நிரப்ப முடியாது என்ற தகுதியை அடைவதே உண்மையான மதிப்பு.




- நீங்கள் பலவீனமாக இருக்கும்போது எவருடனும் சென்று சண்டை போடாதீர்கள். வலிமையாக இருக்கும்போது வரும் சண்டைகளில் எதிராளிகளை மன்னித்துவிடுங்கள்.
- உங்களைக் கண்டுகொள்ளாத எவர் முன்னும் உங்கள் பிரச்னைகளைச் சொல்லிப் புலம்பாதீர்கள். உங்களுக்கு ஆறுதல் சொல்ல முன்வராத எவர் எதிரிலும் கண்ணீர் விட்டுக் கலங்காதீர்கள்.
- உங்களைவிட்டு விலகிச் சென்ற எவரிடமும் துரத்திச் சென்று பழகாதீர்கள். உங்களின் மதிப்பிற்குரிய நேரத்தை, அவர்களை நினைத்து வருந்தி வீணடிக்காதீர்கள். அவர்கள் விலகியதற்கு அவர்களிடம் ஏதேனும் காரணம் இருக்கும். விட்டுவிடுங்கள்.
- எந்தக் காரணத்துக்காகவும் உங்களை நீங்களே உடலாலும் மனதாலும் வருத்திக்கொள்ளாதீர்கள். வாழ்க்கையில் ஏற்கெனவே பல சவால்களும் பிரச்னைகளும் உங்களை வருத்திக்கொண்டிருக்கும். நீங்களும் அதில் சுமையை ஏற்றாதீர்கள்.
- எல்லாச் சங்கடங்களையும் மனதுக்குக் கொண்டு போகாதீர்கள். 'இது எனக்கு நேர்ந்த அவமானம்', 'இந்தப் பிரச்னைக்கு நான்தான் காரணம்', 'இது எனக்கு மட்டுமே இப்படி நடக்கிறது' என்றெல்லாம் பல விஷயங்களை பர்சனலாக எடுத்துக்கொண்டால் நிம்மதி போய்விடும். 'இதிலிருந்து மீள்வதற்கு என்ன வழி' என்று தீர்வை மட்டுமே எப்போதும் யோசியுங்கள்.
- சோகமான பாடல்களைக் கேட்பது, வாழ்க்கையில் எப்போதோ நிகழ்ந்த துயரங்களை நினைத்து அசைபோடுவது, உங்கள் சோகக்கதைகளை நண்பர்களிடமும் உறவுகளிடமும் சொல்லிப் புலம்புவது என்று இருக்காதீர்கள். உங்களின் சக்தியெல்லாம் அதில் வீணாகிவிடும். மனதில் உற்சாகத்தை நிரப்பி உழைத்துக்கொண்டே இருங்கள்.
- நெருக்கடியான தருணங்களிலும், பிரச்னைக்குரிய சூழல்களிலும் உங்களுடன் இருந்த நண்பர்களையும் உறவுகளையும் மறக்காதீர்கள். அவர்களை அன்பாகவும் கனிவாகவும் நடத்துங்கள். அவர்களே உங்களின் ஊக்க சக்தி.
- பிறந்த நாள், திருமண நாள், உங்களுக்கு ஒரு பதவி உயர்வு கிடைக்கும் நாள், உங்கள் துறையில் ஏதோ ஒரு சாதனையைப் படைத்த தருணம் என்று வாழ்க்கையின் முக்கியமான நாட்கள் எல்லாவற்றையும் கொண்டாட மறக்காதீர்கள். எதிர்காலத்தைச் சரியாகத் திட்டமிடுவதற்கு இந்தக் கொண்டாட்டங்கள் உதவும்.
- உங்கள் நம்பிக்கையையும் விசுவாசத்தையும் அலட்சியப்படுத்தும் நபர்களை வாழ்விலிருந்து விலக்கி வையுங்கள். அப்படிப்பட்டவர்களுடன் இருப்பது, உங்களின் நம்பகத்தன்மையைச் சந்தேகத்துக்கு ஆளாக்கிவிடும்.
- ஒருவரின் பேச்சுக்கும் அவரின் செயல்களுக்கும் வித்தியாசம் இருந்தால், அப்படிப்பட்ட நபர்களை நம்பி எந்த விஷயத்திலும் இறங்காதீர்கள். நீங்கள் எதிர்பார்க்காத ஏதோ ஒரு நெருக்கடியில் உங்களை அவர்கள் தள்ளிவிடுவார்கள்.
- எதிர்மறையாகப் பேசும் மனிதர்களுடன் எப்போதும் இருக்காதீர்கள். அவர்கள் உங்களையும் எதிர்மறை உணர்வுகளில் ஆழ்த்தி, உற்சாகமாகச் செயல்பட முடியாதபடி செய்துவிடுவார்கள்.
- அன்பு, மரியாதை, கவனம் என்று எதையும் எவரிடமும் திரும்பத் திரும்பப் போய் யாசகமாகக் கேட்காதீர்கள். உங்கள் மதிப்பை உணர்ந்து, உங்களை நீங்களே மரியாதையுடன் நடத்துங்கள். ●

# மதிப்பான வாழ்வுக்கு வழிகள்!



- பணத்தை எதற்காகச் செலவழிக்க விரும்புகிறீர்கள் என்பதில் உங்கள் மதிப்பு அடங்கியுள்ளது. நண்பர்களுடன் உற்சாகமாக எங்காவது செல்வதற்குச் செலவழிக்கத் தயங்கும் ஒருவர், தனக்காக 10 ஆயிரம் ரூபாய் செலவிட்டு ஷூ வாங்குவதன் மூலம் அவர் மதிப்பு உயர்வதில்லை. ஒரு நல்ல புத்தகம் வாங்குவதை வீண் செலவாகக் கருதிவிட்டு, உயர் ரக வெளிநாட்டு மதுவுக்குச் செலவழித்துப் போதையில் மூழ்குபவரைச் சமூகம் மதிப்பதில்லை.
- ஊதாரித்தனமாகச் செலவழிக்கும் நண்பரிடம், பண விஷயத்தில் ஆலோசனை கேட்க மாட்டோம். போதைகளுக்கு அடிமையான ஒருவர் எதைச் சொன்னாலும் கேட்க மாட்டோம். ஆனால், இப்போது எல்லோருமே தங்களை ஒரு வழிகாட்டி போல நினைத்துக்கொண்டு கருத்துச் சொல்கிறார்கள், விமர்சனம் செய்கிறார்கள், அட்வைஸ் தருகிறார்கள். இதில் யார் சொல்வதை மனத்துக்குக் கொண்டுசெல்வது, யார் சொல்வதைப் புறக்கணிப்பது என்பதில் தெளிவாக இருங்கள். வாழ்க்கையில் நீங்கள் யார் போல ஆக வேண்டும் என்று நினைக்கிறீர்களோ, அந்த ரோல் மாடல்கள் சொல்வதைக் கேளுங்கள்.
- இந்த உலகம் வேகமாக இயங்கிக் கொண்டிருக்கிறது. நெருங்கிய உறவினர்கள் கூட, நீண்ட நாள் தொடர்பில் இல்லாவிட்டால் நம்மை மறந்துவிடுகிறார்கள். பழகும் எவரிடமும் தொடர்ந்து தொடர்பில் இருங்கள். அவர்களுடன் இனிமையான உரையாடல்கள் தொடரட்டும். முக்கியமான தினங்களில் அவர்களுக்கு வாழ்த்துச் சொல்ல மறக்காதீர்கள்.
- ‘இதைச் செய்வது கஷ்டம்’ என்று நம்பும் ஏதாவது ஒன்றைத் தினமும் செய்யுங்கள். உதாரணமாக, குளிர்ச்சியான தண்ணீரில் குளிப்பது உங்களுக்குக் கஷ்டமான விஷயமாக இருக்கலாம். கோடையில்கூடச் சுடுதண்ணீரில் குளிக்கும் வழக்கம் உங்களுக்கு இருக்கலாம். அதை மாற்றிக் குளிர்நீரில் குளிப்பது உங்கள் மன உறுதியை அதிகரிக்கச் செய்யும்.
- ஒரு நாளில் ஒன்றரை மணி நேரமாவது உங்களுக்காக ஒதுக்குங்கள். நடைப்பயிற்சி, உடற்பயிற்சி, செய்தித்தாள்கள் படிப்பது, மனதுக்கு வளம் தரும் நூல்கள் ஏதேனும் படிப்பது, நீங்கள் இருக்கும் துறை சார்ந்து ஏதேனும் பயிற்சிகள் பெறுவது என்று இந்த நேரத்தைப் பயன்படுத்துங்கள். உங்களுக்காக நீங்கள் செய்யும் இந்த உழைப்புதான் உங்களை மதிப்பான இடத்தில் வைக்கும்.
- சில சூழல்கள் எரிச்சலை ஏற்படுத்தலாம், சில மனிதர்கள் கோபப்படுத்தலாம். ஆனால், யாரைப் பற்றியும், எதைப் பற்றியும் புகார்கள் சொல்லிக்கொண்டு இருக்காதீர்கள். அது உங்களுக்குள் எதிர்மறையான உணர்வுகளைக் கிளறிவிட்டு, உங்களை முடக்கிப் போட்டுவிடும். ஆக்கப்பூர்வமான எந்த விளைவையும் அது ஏற்படுத்தாது. எதையும் கடந்து செல்லுங்கள்.
- பொய்யான தகவல்களைச் சொல்லாதீர்கள். உண்மை எப்போதும் நினைவில் இருக்கும். பொய்களை ஞாபகம் வைத்துக்கொண்டு வாழ்வது கடினம். அதேபோல், நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகளை யாருக்கும் தராதீர்கள்.
- உங்களைப் பொறுத்தவரை ‘வாழ்வின் வெற்றி எது’ என்பதைத் தெளிவாக முடிவு செய்யுங்கள். உங்கள் வேலை, தொழில் அல்லது வியாபாரத்தில் ஏதோ ஒன்றை அடைவதுதான் வெற்றி என்று நினைத்தால், அதை அடைவதற்கு உழைப்பைக் கொடுங்கள். வெற்றியே ஒவ்வொருவருக்கும் மதிப்புக் கொடுக்கிறது. மற்றவர்கள் தேடி வந்து வழி கேட்கும் உயரமான இடத்தில் உங்களை வைக்கிறது.



# மதிப்பு மொழிகள்!

**x.com/kumarfaculty**

கரையை நெருங்க நெருங்க, துடுப்பின் மதிப்பு குறைந்து கொண்டே வருகிறது!

**x.com/sasitwittz**

தங்கம் கிராம்ல வாங்கினாலும் சந்தோஷமா இருக்கும், அதுவே இரும்பு டன் கணக்குல வாங்கினாலும் மகிழ்ச்சி இருக்காது... அளவு முக்கியமில்லை, மதிப்பு இருந்தாலே போதும்!

**x.com/itz_radhi3**

தேவை இல்லாதவற்றுக்கு விளக்கம் கொடுத்தால், அந்தக் கருத்துக்கு மதிப்புக் கொடுப்பது போல் ஆகிவிடும்!

**x.com/rajini198080**

வாழ்க்கையில்நாம்பெற்ற ஆசீர்வாதங்களின் மதிப்பை அறிய விரும்பினால், மற்றவர்களின் துக்கங்களின் எடையை நாம் அறிந்திருக்க வேண்டும்.

**x.com/manipmp**

ஒரு நிமிடத்தின் மதிப்பை நம் மனமே தீர்மானிக்கிறது!

**x.com/Amutha742477151**

சில விஷயங்கள் எளிதாய்க் கிடைப்பதால் நமக்கு அலட்சியமாய்த் தோன்றலாம். ஆனால், அதற்கான மதிப்பை உணரும்போது அது தேடினாலும் கிடைக்காது..!

**x.com/laksh_kgm**

**கால தாமதம் செய்வது என்பது, மதிப்பான ஒரு பொருளைத் தொலைப்பதற்குச் சமம்!**

**x.com/kumarfaculty**

மொபைல் இல்லாதபோதோ, மொபைலில் சார்ஜ் இல்லாதபோதோ மட்டுமே ஜன்னலோர இருக்கைகளுக்கு மதிப்பு!

**x.com/itz_radhi3**

எந்த நிலையிலும் நீங்கள் நீங்களாகவே இருங்கள்... நகலைவிட அசலுக்கே மதிப்பு அதிகம்!

**x.com/itz_radhi3**

நம்ம மதிப்பு ஒரு இடத்தில் புரிந்துகொள்ளப்படவில்லை என்றால், நாம் தவறான இடத்தில் இருக்கிறோம் என்று அர்த்தம்!

**x.com/Suyanalavaathi**

உங்களுக்குப் பணத்தோட மதிப்பு தெரியலன்னு சொன்னா, இதுவரைக்கும் உங்களை யாரோ தாங்கிப் பிடிச்சுட்டு இருக்காங்கனு அர்த்தம்!

**x.com/sakthibalu_twtz**

பாதுகாக்கப்பட வேண்டிய ரொம்பவும் மதிப்பான பொருள், நம் மனசுதான்!

**x.com/masha_twits**

பணம், நகை நட்டு, துணிமணி, வீடு வாசல், வேலை, அந்தஸ்து, உறவுகள், நட்பு, கொண்டாட்டம், சந்தோஷம்... இவையெல்லாம் முக்கியம்தான். அதைவிட மதிப்பான ஒரு விஷயம் ஆரோக்கியம்!

**x.com/laksh_kgm**

**விடை தெரியும் வரைதான் விடுகதைக்கு மதிப்பு!**

**x.com/imkamalguru**

சரியான தருணங்களில் மதிப்பான மௌனத்தைக் கடைப்பிடிப்பவர்களே அனைத்தையும் கற்கின்றனர்!





# மதிப்பு மொழிகள்!

**x.com/SelvaBSctwitz**

**பணத்தை விட அனுபவத்திற்குத்தான் மதிப்பு அதிகம்!**

**x.com/Alexxious**

மதிப்பான தோல்விகளும் உண்டு; மதிப்பற்ற வெற்றிகளும் உண்டு!

**x.com/itz_radhi3**

உங்கள் மதிப்பை அடுத்தவர்களின் அளவுகோலால் அளக்காதீர்கள்!

**x.com/MadrasWalker**

நம் மதிப்பை முழுமையாக உணரும்போது, சிக்கல்களை உதாசீனப்படுத்திவிட்டு அமைதியாக வாழ முடியும்.

**x.com/Manjall**

பேரன்பு கிடைக்கும்பொழுது அதன் மதிப்பை அறிந்து பொக்கிஷப்படுத்துங்கள். எட்டி உதைத்து இழந்து விடாதீர்கள்.

**facebook.com/Gopinathan Palani**

உங்கள் மதிப்பு உங்கள் சூழ்நிலையைப் பொறுத்துத் தீர்மானிக்கப்படுகிறது. ஒரு லிட்டர் தண்ணீர் பாட்டிலின் விலை ரயில்வே ஸ்டேஷனில் 20 ரூபாய், விமான நிலையத்தில் 100 ரூபாய், ஐந்து நட்சத்திர ஹோட்டலில் 400 ரூபாய் என்று மாறுகிறது. அதே போல, நீங்கள் யாருடன் இருக்கிறீர்கள் என்பதைப் பொறுத்து உங்கள் மதிப்பும் மாறுகிறது. உங்கள் சூழ்நிலையை நீங்களே தேர்ந்தெடுக்க வேண்டும். ரயில்வே ஸ்டேஷன் தண்ணீர் பாட்டிலாக இருக்க விரும்புகிறீர்களா அல்லது ஐந்து நட்சத்திர ஹோட்டல் தண்ணீர் பாட்டிலாக இருக்க விரும்புகிறீர்களா? முக்கியமான விஷயம் என்னவென்றால், மதிப்பு பொருளில் இல்லை... அது இருக்கும் இடத்தில் உள்ளது.

**facebook.com/KOWSALYA**

ஒரு விஷயம் சுலபமாகக் கிடைத்துவிட்டது என்பதற்காக அதன் மதிப்பு தெரியாமல் இருந்து விடாதீர்கள்... அது உங்களை விட்டு நீங்கும்பொழுது பெரும் வலியை கொடுத்துச் செல்லும்.

**facebook.com/Kavithasivakumar**

நீ வைரமாக இருந்தாலும், தகுதியற்றவர் கையில் கிடைத்தால் நீ கூழாங்கல்தான். நீ கூழாங்கல்லாய் இருந்தாலும், தகுதி உள்ளவர் கையில் கிடைத்தால் நீ வைரமாய் மாற்றப்படுவாய். உன் மதிப்பு உன்னை மட்டும் சார்ந்தது அல்ல... நீ சேரும் இடத்தையும் சார்ந்ததே!

**facebook.com/Kathiravan**

முடிவு தெரிந்த புத்தகத்திற்கு எப்படி மதிப்பு இருக்காதோ... அதுபோலதான் ஒருவரைப் பற்றி முழுவதும் தெரிந்துகொண்டாலும் அவர்களுக்கு அங்கு மதிப்பு இருக்காது. உங்களுக்கு மதிப்புக் கிடைக்க வேண்டுமெனில், எல்லா இடத்திலும் ஓரளவாவது மர்மத்தோடு இருங்கள்!

**facebook.com/Rajasekar**

மற்றவர்கள் உங்களை மதிப்பிடுவது இருக்கட்டும்... முதலில் உங்கள் திறனை நீங்கள் நம்ப வேண்டும்!

**facebook.com/Kiruba**

வாழ்க்கையின் மதிப்பு, ஒருவர் எவ்வளவு காலம் வாழ்கிறார் என்பதில் இல்லை. அந்த வாழ்நாளை எப்படிப் பயன்படுத்துகிறார் என்பதில்தான் உள்ளது.

**x.com/itz_radhi3**

**கேட்காமல் கிடைக்கும் எதற்கும் மதிப்பு அதிகம் கிடைப்பது இல்லை!**

**facebook.com/Chandrasekaran Srinivasan**

ஒருவருக்குக் குப்பையாகத் தெரியும் ஒரு பொருள், இன்னொருவருக்குப் பொக்கிஷமாகத் தெரியலாம். உங்கள் மதிப்பைத் தெரிந்தவர்களுடன் இருப்பதே உங்களுக்குப் பெருமை.





# மதிப்புக் கொடுங்கள்!

• கொட்டும் மழையில் சாலையோரம் அமர்ந்து பூ விற்றுக்கொண்டிருக்கிறார் பெண்மணி ஒருவர். தான் மழையில் நனைவதைப் பற்றி அவர் கவலைப்படவில்லை. பிளாஸ்டிக் தாளால் மூடி வைக்கப்பட்டிருக்கும் பூக்களைச் சீக்கிரம் விற்றால்தான் இன்று குழந்தைகளின் பசியாற்ற முடியும் என்ற கவலை அவர் முகத்தில் தெரிகிறது. 'சாதாரண நாட்களிலேயே வியாபாரம் சுமார்தான். மழை பெய்தால் யாரும் பூக்கடைப் பக்கம் திரும்ப மாட்டார்கள்' என்று தவிக்கிறார். அப்போது காரில் வந்து இறங்கி அவரிடம் நிறைய பூ வாங்கிக்கொண்ட ஒரு பெண், தன் குடையை அந்தப் பெண்மணியிடம் கொடுக்கிறார். "நனையாம உட்காருங்கம்மா, உங்க பூ எல்லாம் வித்துடும். கவலைப்படாதீங்க" என்று ஆறுதல் சொல்லிப் போகிறார்.

• காலையில் சாப்பிடாமல் அவசரமாகப் பள்ளிக்கு வந்துவிட்டான் ஒரு சிறுவன். பசி தாங்க முடியவில்லை. ரகசியமாகத் தன் பையில் இருக்கும் லஞ்ச் பாக்ஸைப் பிரித்துச் சாப்பிட நினைக்கிறான். அதைக் கையிலும் எடுத்துவிட்டான். 'லஞ்ச் பாக்ஸைத் திறந்தால் வகுப்பறை முழுக்க வாசனை வருமே, என்ன செய்யலாம்' என்று யோசிக்கிறான். ஆசிரியர் அதைப் பார்த்துவிடுகிறார். வேகமாக வந்து அவனை எழுப்புகிறார். அவர் அடிப்பதற்காகத்தான் தன்னை எழுப்புகிறார் என நினைத்து அவன் பயத்துடன் எழுந்து நிற்க, "இப்பவே இதைச் சாப்பிட்டுட்டா மதியம் என்ன செய்வே? டீச்சர்ஸ் ரூம்ல என் பேக் இருக்கும். அதுல சின்ன பாக்ஸ்ல ஸ்நாக்ஸ் எடுத்துட்டு வந்திருக்கேன். அதைப் போய்ச் சாப்பிடு. பசி தீரும்" என்று அனுப்பி வைக்கிறார்.

• பஸ் ஸ்டாண்டில் பேருந்துக்காகக் காத்திருக்கிறார் ஓர் இளம்பெண். அவரின் கைக்குழந்தை பசியில் அழுகிறது. அதற்குப் பால் கொடுக்க வேண்டும். மறைவிடம் ஏதும் இல்லாததால் தயங்குகிறார் அவர். "கொஞ்ச நேரம்டா செல்லம், பஸ் வந்துவிடும். இப்போ வீட்டுக்குப் போயிடலாம்'' என்று குழந்தையைச் சமாதானப்படுத்துகிறார். ஆனால், குழந்தை அழுகையை நிறுத்தவில்லை. பஸ் ஸ்டாண்டில் கல்லூரி மாணவர்கள் நான்கைந்து பேர் நிற்கிறார்கள். அவர்கள் நிலைமையைப் புரிந்துகொள்கிறார்கள். அவர்கள் அந்தப் பெண்ணுக்குத் தங்கள் முதுகைக் காட்டியபடி பஸ் ஸ்டாண்ட் வாசலில் நெருக்கமாக நின்று மறைப்பை ஏற்படுத்திவிட்டு, "நீங்க பால் கொடுத்துட்டுச் சொல்லுங்கக்கா... அப்புறம் நாங்க போறோம்" என்கிறார்கள். குழந்தையின் பசி தீர்கிறது.

‘இந்தச் சமூகம் ஏன் இவ்வளவு மோசமாகிவிட்டது’ என்று எதிர்மறையான விஷயங்களைப் பார்த்துப் புலம்பும் எல்லோருமே, தங்கள் மனக்கண்களைத் திறந்து கவனித்தால், இப்படி ஏராளமான காட்சிகளைப் பார்க்க முடியும். பலரும் எல்லோரிடமும் விவாதம் செய்ய நினைக்கிறார்கள். நமக்குப் பிடிக்காத கருத்தை ஒருவர் சொன்னால், அவரை வார்த்தைகளால் குதறி எடுக்கப் பார்க்கிறார்கள். இதனால் நட்பை இழந்துவிடுவோமோ, உறவு முறிந்துவிடுமோ என்றெல்லாம் அவர்கள் யோசிப்பதே இல்லை.

நமக்குப் பாகற்காய் பிடிக்கும் என்றால், அதை வெறுக்கும் ஆயிரக்கணக்கானவர்கள் இங்கு உண்டு. நமக்குக் கத்தரிக்காயைப் பிடிக்க நிறைய காரணங்கள் இருப்பது போல, அவர்களுக்கு அதைப் பிடிக்காமல் போகவும் சில காரணங்கள் இருக்கும். அந்த உணர்வுக்கு நாம் மதிப்பளிக்க வேண்டும். அடுத்தவர்களை மதிக்கும்போதுதான் நாம் மதிப்புப் பெறுகிறோம். உங்களிடம் என்ன குணங்கள் இருந்தால், உங்கள் வாழ்வு மதிப்புப் பெறும்?

● **கருணை:** இந்த அவசர யுகத்தில் எங்கும் சுயநலம் அதிகரித்துவிட்டது. ‘நான்’, ‘என்னுடையது’, ‘எனக்கு மட்டும்’ போன்ற வார்த்தைகளையே அதிகம் கேட்கமுடிகிறது. அடுத்தவர்களை நினைப்பதும், அறிமுகம் இல்லாத மனிதர்களுக்கும் இரக்கம் காட்டுவதுமே கருணை. நமக்கு மிகவும் அவசியமாகத் தேவைப்படும் ஒரு பொருளைக்கூட, தயக்கமின்றி அடுத்தவர்களுக்குக் கொடுக்க முடிகிற மனமே கருணையின் உச்சம்.

● **நன்றி:** அடுத்தவர் செய்யும் உதவிகளுக்கு மறக்காமல் நன்றி சொல்வது நல்ல பண்பு. இதன்மூலம் நீங்கள் நிறைய பேருக்கு மகிழ்ச்சியையும் மன நிறைவையும் தருகிறீர்கள்.

● **ஒழுங்கு:** மிக முக்கியமான குணம் இது. ‘இதை இப்படித்தான் செய்வது’ என்று ஒரு ஒழுங்குக்குள் எல்லாவற்றையும் வைத்திருப்பவர்கள் எல்லோராலும் மதிக்கப்படுவார்கள். யாரையும் காக்க வைக்காதது, எதையும் திட்டமிட்டுக் குறித்த நேரத்துக்குள் செய்வது போன்றவையே ஒழுங்குள்ள மனிதரின் இயல்புகள்.

● **நீதிநெறி:** சட்டத்தையும் விதிகளையும் மீறாமல் வாழ்வது ஓர் அரிய பண்பு. எது சரி, எது தவறு என்பதைப் பிரித்துப் பார்த்து, தவறான விஷயங்களைத் தவிர்ப்பவர்களே மற்றவர்களால் மதிக்கப்படுகிறார்கள். தங்களுக்கு எனச் சில நியதிகளை வகுத்துக்கொண்டு அதன்படி வாழ்பவர்களே உயர்ந்த மனிதர்கள் ஆகிறார்கள்.

● **நடத்தை:** நம்மை மற்றவர்கள் எப்படி கண்ணியமாக நடத்த வேண்டும் என நினைக்கிறோமோ, அதேபோல நாமும் மற்றவர்களை நடத்த வேண்டும். தன்னைவிட மேலான இடத்தில் இருப்பவர்களிடம் எல்லோரும் பணிவு காட்டுவார்கள். ஆனால், தன்னைவிடக் கீழாக இருப்பவர்களிடமும் கனிவு காட்டுவது அவசியம்.

● **நியாயம்:** நமக்குச் சரி என்று தோன்றும் கருத்தைத் துணிச்சலாக வெளிப்படுத்துவதும், எந்தச் சூழலிலும் நியாயத்தின் பக்கம் நிற்பதும் உயர்வான பண்புகள். ‘இவர் எதைச் சொன்னாலும் சரியாக இருக்கும்’ என்ற பெயரை எடுப்பது பெரிய விஷயம்.

● **உதவி:** சமூகம் என்பது பல மனிதர்களும் இணைந்தது. ஒருவருக்கு இன்னொருவர் உதவிகள் செய்வதன் மூலமே இனிமையான வாழ்க்கை சாத்தியமாகிறது. முடிந்த உதவிகளை எல்லாச் சூழல்களிலும் பிறருக்குச் செய்யுங்கள். ●


RAMRAJ காட்டன்

# வெண்மை

VENMAII

தமிழ் மாத இதழ்

மலர் 10 இதழ் 10

ஏப்ரல் 2026

பதிப்பாளர் - கௌரவ ஆசிரியர்

**கே.ஆர்.நாகராஜன்**

ஆசிரியர்

**த.செ.ஞானவேல்**

இதழாசிரியர்

**வள்ளி**

வடிவமைப்பு

K. **உதயா**

புத்தக ஆக்கமும் வடிவமைப்பும்:

தரு மீடியா (பி) லிட்.,

எண். 188, தரை தளம்,

14வது குறுக்குத் தெரு சந்திப்பு,

டிபென்ஸ் காலனி, ஈக்காட்டுத்தாங்கல்,

சென்னை - 600 032.

கைப்பேசி: 9952920801

email: contacttharu@gmail.com



இந்தப் புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பதிப்பாளரின் எழுத்துப்பூர்வமான முன் அனுமதி பெறாமல் மறுபிரசுரம் செய்வதோ, அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களில் மறுபதிப்பு செய்வதோ காப்புரிமைச் சட்டப்படி தடை செய்யப்பட்டதாகும்.



Published by
K.R. NAGARAJAN,
Published from
10, Sengunthapuram
Mangalam Road,
TIRUPUR - 641 604.
Ph: 9842274137


# வார்த்தைகளின் மதிப்பு!

பேரரசர் அக்பரின் அரசவையில் மிக முக்கிய அமைச்சராக இருந்த பீர்பாலின் புத்திக்கூர்மை பற்றி நிறைய கதைகள் உண்டு. ஒருமுறை அக்பரிடம், “வார்த்தைகளின் மதிப்பு அதைச் சொல்லும் மனிதர்களிடம்தான் இருக்கிறது” என்றார் பீர்பால். “யார் வாயிலிருந்து வந்தாலும் ஒரு வார்த்தைக்கு ஒரே மதிப்புதான். சொல்லும் மனிதரைப் பொறுத்து எப்படி அர்த்தம் மாறிவிடும்?” என்று மறுத்தார் மாமன்னர்.

உடனே பீர்பால் கைதட்டி அங்கிருந்த காவலனை அழைத்தார். அரசின் முக்கிய மந்திரி அழைத்ததும் ஓடிவந்தார் காவலர். பீர்பால் அவரிடம், “இப்போதே அக்பரைக் கைது செய்து இழுத்துப் போய்ச் சிறையில் அடைத்துவிடு” என்று கட்டளையிட்டார். காவலர் திருதிருவென விழித்தபடி அமைதியாக இருந்தார். பீர்பாலின் இந்தச் செயல் மன்னர் அக்பருக்கு எரிச்சலைத் தந்தது. “நீங்கள் என்னைக் கைது செய்து சிறையில் அடைப்பீர்களா? நான் நினைத்தால் உங்கள் நிலை மிக மோசமாகிவிடும்” என்று எச்சரித்தார் அக்பர். பீர்பால் அப்போதும் அமைதியாகாமல், “உங்களால் என்னை என்ன செய்துவிட முடியும் மன்னரே?” என்று கேட்டார். கோபமடைந்த அக்பர், “பீர்பாலை உடனடியாகக் கைது செய்யுங்கள்” என்று உத்தரவிட்டதும், அங்கிருந்த அத்தனை காவலர்களும் ஓடிவந்து பீர்பாலைச் சிறைப்படுத்தினர்.

பீர்பால் மன்னரைப் பார்த்துச் சிரித்து, “இதையேதான் நானும் சொன்னேன். ஆனால், உங்களுக்கு எதிராக என் வார்த்தைகளுக்கு எந்த அதிகாரமும் இல்லை; மதிப்பும் இல்லை. அதே வார்த்தைகளை நீங்கள் சொன்னதும், நான் கைது செய்யப்பட்டுள்ளேன். வார்த்தைகளின் மதிப்பு, அதை யார் சொல்கிறார்கள் என்பதைப் பொறுத்து மாறுபடும் மன்னா!” என்றார்.

நாம் சொல்லும் வார்த்தைகளில் கவனமாக இருப்போம்.





# உழைப்புக்கே மதிப்பு!

இரண்டு நண்பர்கள் வயல்வெளியில் வந்து அமர்ந்தனர். அவர்கள் இருவரும் தங்களை அறிவுப்பூர்வமாக விவாதம் செய்யும் அறிவாளிகளாக எண்ணிக் கொண்டார்கள். ஆனால், அவர்கள் வெறும் வாய்ப்பேச்சு வீரர்கள். வயல்வெளியில் விவசாயி கடுமையாக உழைப்பதை பார்த்துக்கொண்டே பேசினார்கள்.

“விதை இல்லாமல் ஏது நெற்கதிர்கள்? நெற்கதிர்கள் இல்லாமல் நெல் ஏது? நெல் இல்லாமல் அரிசி ஏது? அரிசி இல்லாமல் உணவு ஏது?” என்று ஒருவர் வியாக்கியானமாய் பேசினார். இதைக் கேட்ட இரண்டாமவர், “உலகில்லாமல் நான் ஏது? நான் இல்லாமல் வயல் ஏது? வயல் இல்லாமல் நெற்பயிர் ஏது?” என்றார். இப்படியே ‘ஏது... ஏது... ஏது...’ என்று வாய்ப்பேச்சு பேசிக் கொண்டிருந்தார்கள்.

மதியம் ஆனதும் விவசாயி சாப்பிட உட்கார்ந்தார். இரு அறிவாளிகளுக்கும் பசித்தது. அவரிடம் போய், “ஐயா, சாப்பிட ஏதாவது இருக்கிறதா?” என்று கேட்டார்கள். அவரும் உணவு கொடுத்துவிட்டு அப்பாவியாக, “ஐயா, நான் நெல் வயலில் வேலை செய்தேன். அரிசி சாதம் சாப்பிடுகிறேன். நீங்கள் அடிக்கடி ‘ஏது... ஏது...’ என்று பேசியதால், அந்த ‘ஏது’வை சாப்பிடுவீர்கள் என்று நினைத்தேன்” என்றார். இரண்டு வாய்ப்பேச்சு வீரர்களும் தங்கள் தவறை உணர்ந்து உழைக்கக் கிளம்பினார்கள்.

# மதிப்பு மாறாது!

நம்மைப் பற்றி நாம் ஒரு மதிப்பு வைத்திருப்போம். ஆனால், சிறிய மனிதர்கள் நம்மை ஏளனத்துடன் குறைத்து மதிப்பிடுவார்கள். அதை ஏற்றுக்கொண்டு முடங்கிப் போகிறோமா, அல்லது புறக்கணித்து முன்னேறிச் செல்கிறோமா என்பதில் இருக்கிறது நம் வளர்ச்சி. நம்மைக் குறைத்து மதிப்பிட்டு ஒரு வட்டத்துக்குள் அடைக்கப் பார்ப்பார்கள் பலர். அதை நிராகரித்து விடுங்கள். நம் மதிப்பு வேறு யாராலோ தீர்மானிக்கப்படுவதில்லை. அதை நம் செயல்களும் சிந்தனைகளும் மட்டுமே தீர்மானிக்க முடியும்.

நம் உழைப்பின் மூலம் நம் சுய மதிப்பை உயர்த்திக்கொண்டே இருக்க வேண்டும். ஒவ்வொரு செங்கல்லாக அடுக்கி உயர்த்தப்படும் மாளிகை போல, தினம் தினம் இதைச் செய்ய வேண்டும். அர்ப்பணிப்பான கடின உழைப்பைத் தவிர உயர்வதற்குக் குறுக்கு வழி எதுவும் இல்லை. உங்கள் உழைப்பையும் மதிப்பையும் குறைவாக யாரேனும் கருதினால், அவர்களிடமிருந்து விலகியிருங்கள்.

சுலபமாக இருக்கும் வேலையை மட்டுமே செய்யாதீர்கள். அதில் உங்களுக்கு வளர்ச்சி இருக்காது. சவாலான வேலைகளைச் செய்து முடிக்கும்போது, உங்கள் திறமையை நீங்கள் உணர்வீர்கள். உங்கள் மதிப்பை எல்லோருக்கும் புரிய வைப்பீர்கள். உங்களைச் சந்தேகப்பட்டவர்களின் வாயை அடைப்பீர்கள்.





# மதிப்பு வையுங்கள்!


டாட்டா குழுமத் தலைவரக இருந்த ஜே.ஆர்.டி.டாட்டா, பல கூட்டங்களில் சக தொழிலதிபர் ஒருவரைக் கவனித்தார். அவரும் நாடு முழுக்கத் தொழில்களைச் செய்யும் பிசியான தொழிலதிபர்தான். ஆனால், அவர் பாக்கெட்டில் மிகச் சாதாரணமான, மலிவு விலையுள்ள பேனாவே எப்போதும் இருந்தது. "இவ்வளவு பெரிய பணக்காரர் நீங்கள். ஏன் இப்படிச் சாதாரண பேனா பயன்படுத்துகிறீர்கள்?" என்று கேட்டார் டாட்டா. "அடிக்கடி பேனாவைத் தொலைத்துவிடுவேன். அது பழக்கமாகவே ஆகிவிட்டது. அதைத் தடுக்க முடியவில்லை. அதனால்தான் மலிவு விலை பேனாவே பயன்படுத்துகிறேன். இது தொலைந்துபோனாலும் பிரச்னை இல்லை அல்லவா?" என்றார் அவர்.

அதைக் கேட்ட டாட்டா, "நீங்கள் மிகவும் விலையுயர்ந்த பேனாவைப் பயன்படுத்தத் தொடங்குங்கள், அதன்பிறகு உங்களிடம் ஏற்படும் மாற்றத்தை நீங்களே உணர்வீர்கள்" என்றார். அதை ஏற்றுக்கொண்ட அந்தத் தொழிலதிபர், தங்கத்தில் உருவாக்கிய பேனா ஒன்றைப் பயன்படுத்த ஆரம்பித்தார். ஆறு மாதங்கள் கழித்து ஒரு கூட்டத்தில் அவரைப் பார்த்த டாட்டா, "இப்போது என்ன நிலவரம்?" என்று கேட்டார். அதற்கு அந்தத் தொழிலதிபர், "இப்போது நான் மிகவும் கவனமாக இருக்கிறேன். தங்க பேனா, அதை ஒருமுறைகூடத் தொலைக்கவில்லை" என்றார். டாட்டா சிரித்தபடி விளக்கம் சொன்னார். "தொலைப்பது உங்கள் பழக்கம் அல்ல. நீங்கள் வைத்திருக்கும் பொருளைக் குறைத்து மதிப்பிட்டதே, அது தொலையக் காரணம். எந்தப் பொருள் மீதும் உங்களுக்கு உண்மையாகவே மதிப்பு இருந்தால், அதைக் கண்டிப்பாக நீங்கள் தொலைக்கவே மாட்டீர்கள்" என்றார்.

# மதிப்பான பெயர் வாங்குங்கள்!

முகத்துக்கு நேரே உங்களைப் பாராட்டுகிறவர்களின் புகழ்ச்சிகளைக் கொஞ்சம் வடிகட்டி, முதுகுக்குப் பின்னால் உங்களைக் குறை சொல்பவர்களின் விமர்சனங்களையும் வடிகட்டி, இரண்டையும் கலந்தால் 'நீங்கள் யார்' என்பது தெரிந்துவிடும். ஒருவரின் நடத்தையும், அவர் பின்பற்றும் வாழ்க்கைமுறையும், அவரது பண்புகளுமே அவர் யார் என்பதை முடிவு செய்கிறது.

ஒருவர் கடன் வாங்கினால் எப்படி அதைத் திருப்பிச் செலுத்துகிறார் என்பதன் அடிப்படையில் சிபில் ஸ்கோர் என்ற ஒன்றைக் கொடுத்து, அதை வைத்தே அவருக்கு வங்கிகள் கடன் கொடுக்கின்றன. பண வரலாறு ஒழுங்காக இருந்தால்தான் கடன் கிடைக்கும். அதுபோல, சமூகத்தில் ஒருவர் வாங்கும் நல்ல பெயரை வைத்தே அவருக்கு நட்புகள், சமூக மதிப்பு, வேலைவாய்ப்பு, தொழில் முன்னேற்றம் என்று எல்லாம் அமைகின்றன. அந்த நல்ல பெயரை எப்படி வாங்குவது?



- எப்போதும் நம்பகமான மனிதராக இருங்கள். வீட்டில் ஒரு மாதிரியும், ஆபீஸில் வேறொரு மாதிரியும், நண்பர்கள் மத்தியில் வேறு மாதிரியும், உறவினர்களிடம் இன்னொரு விதமாகவும் இருக்காதீர்கள். எல்லா இடங்களிலும் உங்கள் உண்மையான இயல்புகளை வெளிப்படுத்துங்கள். அந்த உண்மையான இயல்பு நல்ல பண்புகளுடன் இருக்கட்டும்.

- எல்லோரிடமும் உண்மையாக இருங்கள். எல்லாச் சூழல்களிலும் உண்மையே பேசுங்கள். குறிப்பாக உங்களைப் பற்றிப் பேசுவது உண்மையாக இருக்கட்டும். சராசரி வருமானம் உடைய ஒருவர் தன்னைப் பணக்காரர் போலக் காட்டிக்கொள்ள முயன்றால், தேவையற்ற பிரச்னைகள் வரும். உங்களுக்குத் தெரியாத ஒரு விஷயத்தைத் தெரிந்தது போலக் காட்டிக்கொண்டு நடிக்காதீர்கள். உங்கள் மதிப்பு உயரும். மன உளைச்சல் இல்லாத வாழ்க்கை உங்களுக்குச் சாத்தியமாகும்.

- வாழ்க்கை மிகக் குறுகியது. அதில் உங்களுக்கு மகிழ்ச்சியைக் கொண்டுவந்து சேர்க்கும் செயல்களை மட்டுமே செய்யுங்கள். நீங்கள் வெறுக்கும் செயல்களைச் செய்யாதீர்கள். வேலை நேரம் போக மற்ற நேரங்களில் உங்களுக்குப் பிடித்தமான பொழுதுபோக்குகளில் ஈடுபடுங்கள்.

- எப்போதும் பொறுப்புகளைத் தட்டிக் கழிக்காதீர்கள். நீங்கள் செய்ய வேண்டிய கடமைகளையும் செயல்களையும் பொறுப்பேற்றுச் சரியாகச் செய்ய வேண்டும். அதேபோல, நீங்கள் செய்யும் தவறுகளுக்கும், உங்கள் செயல்களால் நேர்ந்த விளைவுகளுக்கும் பொறுப்பேற்க வேண்டும். அது உங்களுக்கு மிகுந்த துணிச்சலைக் கொடுக்கும். எதையும் சரியாகச் செய்து வெற்றிகளை அடையும் பக்குவத்தையும் வரவழைக்கும்.


- துணிச்சலாகச் செயல்படுங்கள். மற்றவர்கள் என்ன நினைப்பார்களோ, எதிர்காலத்தில் என்ன பாதிப்பு ஏற்படுமோ என்றெல்லாம் யோசித்துத் தயங்காதீர்கள். உங்களை நேசிக்கும் மனிதர்களின் அக்கறையான ஆலோசனைகளை மட்டும் கேளுங்கள். உங்கள் மனம் சொல்லும் செயலைக் கண்ணியத்துடன் செய்யுங்கள். உங்கள் மனம் உங்களைத் தவறான பாதையில் வழிநடத்தாமல் பார்த்துக்கொள்ளுங்கள்.

- எந்தச் சூழலிலும் விசுவாசமாக இருங்கள். குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள், சக ஊழியர்கள் என்று எல்லோரிடமும் அன்பு காட்டி விசுவாசத்தை வெளிப்படுத்துங்கள். ஒருவருடன் உறவு ஏற்படுத்திக்கொள்கிறீர்கள் என்றால், அது ஆபத்தானது என்று தெரிந்தால் தவிர அந்த உறவை முறிக்காதீர்கள். அதேபோல, உங்களுக்கும் நீங்கள் விசுவாசமாக இருங்கள். உங்கள் அவசியத் தேவைகளை எப்போதும் புறக்கணிக்காதீர்கள். ●


RAMYYAM®
SAREES • KURTIS
Product by
RAMRAJ
Available at Ramraj Showrooms and All Leading Textile Shops | Shop Online at www.ramrajcotton.in




Available at Ramraj Showrooms And All Leading Textile Shops


RAMRAJ
ACHARYA®
PANCHAKACHAM DHOTIS
True Spiritual
Strength Reflected
In Simplicity
Shop Online @ www.ramrajcotton.in


RAMRAJ
mithu®
TOWELS
Bamboo
Comfort
The softest touch your
skin remembers
Bamboo Towels | Terry Towels | Signature Towels
Striped Towels | Chequered Towels
Premium Cotton | High Absorption | Quick Drying | Super Soft
Available at Ramraj showrooms and all leading textile shops | www.ramrajcotton.in
STORE LOCATION

**உங்கள் வீட்டுக்கே வர வேண்டுமா?**

# வெண்மை

## சந்தாதாரர் ஆகுங்கள்!



‘உயர்ந்த எண்ணங்கள் உலகம் முழுவதும் சென்றடைய வேண்டும்’ என்ற உயரிய நோக்கில் மதிப்புமிக்க படைப்புகளைத் தொடர்ந்து வெளியிட்டு வருகிறது வெண்மை. இந்த மாத இதழ் ஒவ்வொரு குடும்பத்திலும் பாதுகாக்கப்படும் பொக்கிஷமாகத் திகழ்கிறது.

**ஓர் ஆண்டு சந்தா ரூ.200**
**இரண்டு ஆண்டுகள் சந்தா ரூ.380**

காசோலை/வரைவோலை மூலம் அனுப்பலாம். **VENMAII** என்ற பெயரில் செக்/ டி.டி. அனுப்பவும். பின்புறம் உங்கள் பெயர், ஊர் எழுதவும்.

அல்லது

VENMAII என்ற வங்கிக் கணக்கில் (A/C No:1809135000000299 Karur Vysya Bank, Tirupur SR Nagar Branch - IFSC: KVBL0001809) பணம் செலுத்தி, அதன் ஒப்புகை பிரதியை படிவத்துடன் அனுப்பி வைக்கலாம்.

➲ மணியார்டர்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
➲ அனைத்து ராம்ராஜ் ஷோரூம்களிலும் சந்தா செலுத்தலாம்.

**வெண்மை**
ராம்ராஜ் வி டவர்,
10, செங்குந்தபுரம், மங்கலம் ரோடு,
திருப்பூர் - 641 604.
email: venmaii@ramrajcotton.net

**சந்தா செலுத்தவும், மொத்தமாக வெண்மை இதழ்களைப் பெறவும் தொடர்புகொள்ளுங்கள்.**
**போன்:**
**0421–4304106, 98422 74137**

## ஒரே நிமிடத்தில் வெண்மை சந்தாதாரர் ஆகலாம்!

உங்கள் சந்தாவை PhonePe G Pay Net transfer மூலம் செலுத்துங்கள்.

UPI பரிவர்த்தனை மூலமும் மொபைல் போன் மூலம் வெண்மை வங்கிக் கணக்கில் சந்தா தொகையை செலுத்தலாம். வெண்மை UPI id: kvbupiqr.75626@kvb

Bharat QR code வசதியுள்ள மொபைல் பேங்கிங் ஆப் வைத்துள்ளவர்கள், அதில் இங்கே உள்ள வெண்மை வங்கிக் கணக்கின் QR code –ஐ ஸ்கேன் செய்து சந்தா செலுத்தலாம்.

பணம் செலுத்தப்பட்டதற்கான வங்கித் தகவலை Forward செய்யுங்கள். கூடவே உங்கள் முழு முகவரியையும் அலைபேசி எண்ணுடன் வாட்ஸ்அப் செய்யுங்கள். அலைபேசி எண்: 98422 74137.

**வங்கிக் கணக்கு விவரம்: Venmaii**
**A/C No: 1809135000000299**
**Karur Vysya Bank,Tirupur SR Nagar Branch**
**IFSC Code: KVBL0001809.**



## மாணவ/ மாணவியர் சிறப்பு சலுகை

**(6ம் வகுப்புக்கு மேல் படிக்கும் மாணவர்களுக்கு இந்த சலுகை பொருந்தும். சந்தா செலுத்தும்போது, மாணவர் அடையாள அட்டை நகலை இணைத்து அனுப்பவும்.)**

**ஒரு வருட சந்தா:** ரூ.~~200~~ ரூ.125 மட்டும். | **2 வருட சந்தா:** ரூ.~~380~~ ரூ.250 மட்டும்.



## சீனியர் சிட்டிசன் சிறப்புச் சலுகை

**(60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு இந்த சலுகை பொருந்தும். பிறந்த தேதிக்கான ஆதாரச் சான்று நகலை இணைத்து அனுப்ப வேண்டும்.)**

**ஒரு வருட சந்தா:** ரூ.~~200~~ ரூ.125 மட்டும். | **2 வருட சந்தா:** ரூ.~~380~~ ரூ.250 மட்டும்.

ராம்ராஜ் ஷோரூம்களில் ரூ.10,000க்கு மேல் பொருட்கள் வாங்குபவர்களுக்கு
**ஒரு வருட சந்தா பரிசாக வழங்கப்படும்**



# நேர்மையின் மதிப்பு அதிகம்!

சுற்றுவட்டாரக் கிராமங்கள் எல்லாவற்றுக்கும் மையமாக இருக்கும் சிறுநகரத்தில் வட்டிக்கடை வைத்து நடத்திவந்தார் சம்பத். எல்லாக் கிராமங்களில் இருக்கும் மக்களுக்கும் விவசாயிகளுக்கும் அவர்தான் ஆபத்பாந்தவன். எல்லோரும் நகைகள், வெள்ளிப் பொருட்கள் என்று எடுத்துவந்து அவரிடம் அடகுவைத்துப் பணம் வாங்கிச் செல்வார்கள். விவசாயிகள் அறுவடை முடிந்ததும் வந்து பணம் கொடுத்துத் தங்கள் பொருளை மீட்டுச் செல்வார்கள்.

சம்பத் அதிக வட்டிக்கு ஆசைப்படுபவர் இல்லை. ஆனால், கொடுக்கல் வாங்கலில் கறாராக இருப்பார். குறித்த தேதியில் பணம் அவர் கைக்குத் திரும்ப வந்துவிட வேண்டும். பல வருடங்களாக அந்தப் பகுதியில் தொழில் நடத்திப் பழகியவர் என்பதால், எல்லோரையும் அவருக்குத் தெரியும். கடன் கொடுக்கும்போதே, அவர்கள் திருப்பித் தரக்கூடியவர்களா என்பதை முதலில் நன்றாக ஆராய்ந்து பார்த்துவிட்டே பணம் கொடுப்பார். அதேபோல் அவர்கள் கொடுக்கும் தங்க நகைகள் எதுவாக இருந்தாலும், கண்ணால் பார்த்தே அது எந்த அளவுக்குத் தூய்மையானது என்பதை அவரால் கணித்துவிட முடியும். அவரை யாராலும் எளிதில் ஏமாற்ற முடியாது.

அந்த ஊரில் மாரியப்பன் என்ற ஏழை விவசாயி இருந்தார். அவருக்கு ஒவ்வொரு பருவத்திலும் வயலில் விதை போடவும், உரம் போடவும் அடிக்கடி பணம் தேவைப்படும். ஒவ்வொரு முறையும் அவர் தன் மனைவியிடம் இருந்த ஒரே விலையுயர்ந்த பொருளான தங்க கம்மல்களை எடுத்துவந்து அடகு வைத்துப் பணம் வாங்கிச் செல்வார். விளைச்சல் முற்றி அறுவடை முடிந்ததும் சரியாக வட்டியுடன் கடனை அடைத்து அந்தக் கம்மல்களை மீட்டுச் செல்வார். அடுத்தமுறை மீண்டும் அதையே அடகு வைத்துப் பணம் வாங்குவது அவர் வழக்கம்.

ஒருமுறை அப்படி மாரியப்பன் அந்தக் கம்மல்களை அடகு வைக்க வந்தபோது, சம்பத் கடைக்கு அருகே நகைகள் செய்து விற்கும் கடை நடத்தும் பொற்கொல்லரான லோகுவும் இருந்தார். சம்பத் அந்தக் கம்மல்களை வாங்கிவைத்துக்கொண்டு மாரியப்பன் கேட்டபடி 50 ஆயிரம் ரூபாய் கொடுத்து அனுப்பினார்.

தான் எந்த நகையைப் பார்த்தாலும், அதன் செய்முறையையும் டிசைனையும் கவனிப்பது லோகுவின் வழக்கம். அப்படி அந்தக் கம்மல்களைத் தற்செயலாக எடுத்துப் பார்த்த லோகு ஆச்சர்யப்பட்டார். அவை

அவ்வளவு தூய்மையான தங்கம் அல்ல. கிட்டத்தட்ட பாதியளவு செம்பு கலந்திருப்பது தெரிந்தது. அதன் உண்மையான மதிப்பு 30 ஆயிரம் ரூபாய்கூட இருக்காது. ‘எல்லோரிடமும் கறாராக இருக்கும் சம்பத், இதற்குப் போய் ஏன் இவ்வளவு அதிகமாகப் பணம் தருகிறார்? ஏமாந்துவிட்டாரே! ஒருவேளை இவருக்குத் தங்கம் பற்றித் தெரியாதோ?’ என்று நினைத்தார்.

சில நாட்கள் கழித்து அதேபோலக் கலப்பட நகை ஒன்றை எடுத்து வந்து சம்பத்திடம் கொடுத்த லோகு, “அவசரச் செலவுக்குப் பணம் தேவைப்படுகிறது. இது ஒரு சவரன் நகை. அடகுக்கு எடுத்துக்கொண்டு ஒரு லட்ச ரூபாய் கொடுங்கள்” என்று கேட்டார். அந்த நகையைக் கையில் வாங்கிப் பார்த்ததுமே சம்பத் சிரித்துவிட்டார். “நகை செய்யும் உங்களுக்கு இதன் தரம் தெரியாதா? இது பாதிக்குப் பாதி கலப்படம். 50 ஆயிரம் ரூபாய்கூட மதிப்புப் பெறாது” என்றார்.

அதைக் கேட்ட லோகு திகைத்தார். “அப்படியானால் மாரியப்பன் கொடுத்த கம்மல்களும் இதேமாதிரி கலப்படம்தானே? அதற்கு ஏன் 50 ஆயிரம் கொடுத்தீர்கள்?” என்று கேட்டார். சம்பத் மீண்டும் சிரித்துவிட்டுச் சொன்னார், “எனக்கு அதுவும் கலப்பட நகை என்று தெரியும். ஆனால், மாரியப்பனுக்கு அது தரம்குறைந்த கலப்படம் என்பது தெரியாது. அதைச் சுத்த தங்கம் என்று நம்புகிறார். அது கலப்படம் என்று தெரிந்தால், அவர் மனம் உடைந்து போகும். அவரிடம் உள்ள ஒரே மதிப்புள்ள பொருள் அதுதான். வேறு யாரும் அதை வைத்துக்கொண்டு அவருக்குக் கடன் கொடுக்க மாட்டார்கள். ஆனால் அவர் விவசாயம் செய்ய அந்தப் பணம் அவசியம். அவர் நேர்மையானவர். வார்த்தை தவறாதவர். சொன்ன தேதியில் சரியாகப் பணத்தைக் கொடுப்பவர். அவர் நம்பிக்கையை உடைக்காமல், அவர் நேர்மைக்கு உதவிசெய்யவே அதிகமாகப் பணம் கொடுக்கிறேன். நகையில் நம்பிக்கை வைத்து நான் தரவில்லை, அவர் நேர்மையில் நம்பிக்கை வைத்தே தருகிறேன்” என்றார் சம்பத்.

சில நேரங்களில் தங்கத்தின் மதிப்பைவிட ஒரு மனிதரின் நேர்மைக்கு மதிப்பு அதிகம். அப்படி மதிப்பானவராக மாறுவதற்குச் சில வழிகள் இங்கே:

- எல்லா நேரங்களிலும், எல்லா விஷயங்களையும் ‘பரவாயில்லை, பார்த்துக்கொள்ளலாம்’ என்று சிரித்தபடி எதிர்கொள்வது நல்ல பழக்கம்தான். ஆனால் அப்படிச் செய்யும் மனிதர்களை, ‘இவர்களை எப்படியாவது சமாளித்து விடலாம்’ என்று இந்த உலகம் ஏமாளியாகவே அணுகுகிறது. உங்கள் பேச்சுக்கும் சிரிப்புக்கும் ஏதோ ஓர் அர்த்தம் இருக்கும் என்பது போல நடந்துகொள்ளுங்கள்.
- எல்லாவற்றையும் வெளிப்படையாகச் சொல்லாதீர்கள். உணர்வுகளை வெளிப்படையாகக் காட்டாதீர்கள். உங்கள் திட்டங்களையும் பிரச்னைகளையும் தேவையான நேரத்தில் மட்டுமே வெளிப்படுத்துங்கள். அமைதியாக இருப்பதும் அர்த்தமுள்ளது.
- யாரும் உங்களைத் தகுதிக்குறைவாகவோ, அவமரியாதையாகவோ நடத்த அனுமதிக்காதீர்கள். அப்படி யாராவது செய்தாலும், “இது என்னிடம் நடக்காது” என அமைதியாக, ஆனால் உறுதியாக எதிர்ப்புக் காட்டுங்கள். உங்களிடம் அடுத்தவர்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதற்கு வரம்பு நிர்ணயித்துக்கொள்ளுங்கள். உங்களின் மதிப்பை உணராத மனிதர்களிடமிருந்து ஒதுங்கி நில்லுங்கள்.
- ‘இதைச் செய்தால் இவர்கள் கோபப்படுவார்களா’, ‘அது அவர்களுக்குப் பிடிக்குமா’ என்று சந்தேகப்படாதீர்கள். உங்கள் செயல்களுக்கு அடுத்தவர்களின் பாராட்டும் அங்கீகாரமும் வேண்டும் என எதிர்பார்க்காதீர்கள். உங்கள் முடிவுகளில் நம்பிக்கை வையுங்கள்.




- உங்களின் எல்லாச் செயல்களுக்கும் மற்றவர்களிடம் விளக்கம் சொல்லிக்கொண்டு இருக்காதீர்கள். உங்களைத் தன்னம்பிக்கை இல்லாதவராக அது காட்டிவிடும். ‘அவர் எதைச் செய்தாலும் அதற்கு ஓர் அர்த்தம் இருக்கும்’ என்று எல்லோரும் நினைக்கும்படியான செயல்களைச் செய்யுங்கள்.
- அடுத்தவர்கள் எது சொன்னாலும் தலையாட்டாதீர்கள். தேவையான இடங்களில் உங்கள் எதிர்கருத்தைச் சொல்லுங்கள். யார் எதைக் கேட்டாலும், ‘செய்து தருகிறேன்’ என ஒப்புக்கொள்ளாதீர்கள். உங்களால் முடியாத விஷயங்களுக்கு ‘நோ’ சொல்லுங்கள். எப்போதும் ‘யெஸ்’ சொல்பவர்களை இந்த உலகம் அலட்சியமாக நினைக்கிறது. ●

# வாழ்வில் எது மதிப்பு?

நம் வாழ்வுக்கு அர்த்தம் தருவது, நாம் கடைப்பிடிக்கும் மதிப்பான பண்புகள்தான். சமூக ஒழுங்குக்கான சட்டங்கள் நிறைய உண்டு, விதிகள் உண்டு, அறங்கள் உண்டு, நியாயங்கள் உண்டு. இவற்றின் அடிப்படையில் எது சரி, எது தவறு என்று முடிவுசெய்து நாம் பின்பற்றினால்தான் நமக்கு மதிப்பு.

தனிப்பட்ட மதிப்பு, சமூக மதிப்பு, அற மதிப்பு, பண்பாட்டு மதிப்பு என்று மதிப்பில் பல வகைகள் உண்டு. நேர்மை, கற்பனைத்திறன், எதையும் புதுமையாகச் செய்வதில் கொள்ளும் ஆர்வம் போன்றவை தனிப்பட்ட மதிப்புகள். ஒவ்வொரு மனிதரும் தனிப்பட்ட முறையில் இவற்றைப் பின்பற்றுவது நன்று. உறவுகளுடனும் நண்பர்களுடனும் இனிமையாகப் பழகுவது, கடினமான சூழல்களையும் பொறுமையுடன் அணுகுவது, அடுத்தவர்கள் தரும் சங்கடங்களைச் சகித்துக்கொள்வது போன்றவை சமூக மதிப்புகள். அறிமுகம் இல்லாதவர்களையும் கண்ணியமாக நடத்துவது, பொது அமைதிக்கு ஏற்றபடி நடந்துகொள்வது, சக மனிதர்களின் உரிமையை மதிப்பது, அடுத்தவர்களின் சுதந்திரத்துக்குப் பாதிப்பு இல்லாமல் இயங்குவது போன்றவை உலகின் பொதுவான மதிப்புகள்.

அடுத்தவர்களை ஊக்கப்படுத்துவது, நமக்கு மரியாதை கொடுப்பது போலவே பிறரையும் மரியாதையுடன் நடத்துவது, சொன்ன சொல்லைக் காப்பாற்றுவது போன்றவை அற மதிப்பீடுகள். சுயக் கட்டுப்பாடு, தூய்மையான மனம், தியானம், பக்தியுடன் செய்யும் செயல்கள் போன்றவை ஆன்மிக மதிப்புகள். நாம் வசிக்கும் இடத்துக்கும் வாழும் சமூகத்துக்கும் பொருத்தமான நடைமுறைகளைப் பின்பற்றுவது பண்பாட்டு மதிப்பு.

ஒருவர் தன் வாழ்வில் இப்படி எல்லா மதிப்புகளையும் முக்கியமாகக் கருத வேண்டும். ஆரோக்கியமாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ்ந்து வெற்றிகளை எட்டுவதற்கு இந்த மதிப்புகள் அவசியம்.

தனிப்பட்ட முறையில் ஒருவர் மதிப்புடன் வாழ்வதற்கு சில அடிப்படையான விஷயங்கள் வேண்டும். முதல் விஷயம், ஆரோக்கியம். உற்சாகமான மனநலனும் ஆரோக்கியமான உடல்நலனும் ஒருவருக்கு வாய்த்துவிட்டால், அவரால் எதையும் செய்ய முடியும். தான் அடைய நினைக்கும் இலக்கை நோக்கி உழைக்கலாம். மற்றவர்களிடம் மகிழ்ச்சியைப் பரப்பலாம். எல்லோருக்கும் ஒரு ரோல்மாடலாக வாழலாம்.

ஆரோக்கியம் போலவே அவசியமானது நிதிச்சுதந்திரம். எந்த நேரத்திலும் பணத்தேவைக்காக யாரையும் சார்ந்து இருக்காமல், தான் விரும்பும் விஷயங்களைச் செய்துபார்க்க இது அவசியம். குடும்பத்தை மகிழ்ச்சியாக வைத்திருக்கவும் இதுவே அடிப்படை.

இந்தச் சமூகத்தில் யாரும் தனியாக இல்லை. யாருடைய உதவியும் இல்லாமல் எவராலும் தனிப்பட்ட முறையில் எதையும் சாதித்துவிட முடியாது. நண்பர்களுடனும் உறவினர்களுடனும் அன்பான பிணைப்பு இருப்பதும், அவர்களுடன் அக்கறையான உறவைப் பராமரிப்பதும் மதிப்பைக் கொடுக்கும். பரஸ்பரம் எவருக்கும் மரியாதை கொடுப்பது, நமக்கும் மரியாதையைப் பரிசாகக் கிடைக்கச் செய்யும்.

வேலை, தொழில், வியாபாரம் என எதுவானாலும் அதை மிகச்சிறப்பாகச் செய்துவிட முடிந்தால், உங்களுக்கான மரியாதையும் மதிப்பும் எப்போதும் நிரந்தரமாக இருக்கும். அதற்கு ஏற்றபடி உங்களை நீங்களே மெருகேற்றி மாறிக்கொள்ள வேண்டும். ●





# நன்மதிப்பைத் தரும் பழக்கங்கள்!

**சில பழக்கங்களை நீங்கள் எப்போதும் பின்பற்றினால், மற்றவர்களிடமிருந்து தனித்துத் தெரிவீர்கள். வாழ்விலும் நன்மதிப்புப் பெறுவீர்கள்.**

- பெரும்பாலான மனிதர்கள் 100 மீட்டர் தூரத்தை ஓடிக் கடப்பதற்கு 10 நொடிகளுக்கு மேல் ஆகும். அந்த நேரத்துக்குள் ஓட முடிப்பவர்களே ஒலிம்பிக் பதக்கம் பெறுகிறார்கள். 'உன்னால் முடியாது' என்ற நிராகரிப்புகளைக் காதில் வாங்காமல் தங்களை நம்பி முயற்சி எடுத்துச் சாதித்தவர்கள் அவர்கள். அப்படி, 'இதற்கு மேல் இதைச் செய்வது சாத்தியமே இல்லை' என்று கைவிடப்படும் நிலையில் இருக்கும் ஒரு விஷயத்தை எடுத்துச் செய்து காட்டினால் நன்மதிப்புக் கிடைக்கும்.
- வெறும் வார்த்தைகளுக்கு எந்த மதிப்பும் இல்லை. சொல்வது யார் என்பதைப் பொறுத்தே அவை மதிப்புப் பெறுகின்றன. சொல்லுக்கும் செயலுக்கும் வித்தியாசம் இல்லாமல் வாழுங்கள். 'இவர் ஒரு விஷயத்தைச் சொன்னால், அதை நிச்சயமாகச் செய்வார்' என்ற நம்பிக்கையைக் கொடுங்கள்.
- அடுத்தவர்களுக்கு அறிவுரை சொல்வது சுலபம். எந்தச் செலவும் இல்லாமல் எல்லோருக்கும் இலவசமாகக் கிடைப்பவை ஆலோசனைகளும் அறிவுரைகளும்தான்! அப்படி அறிவுரையும் ஆலோசனையும் சொல்லும் ஒருவர், தான் சொல்வதைச் செயலிலும் காட்ட வேண்டும். நீங்கள் பின்பற்றாத எதையும் அறிவுரையாக மற்றவர்களுக்குச் சொல்லாதீர்கள்.
- எப்போதும் பெறுபவராக மட்டும் இருக்காதீர்கள். ஒருவரிடமிருந்து எதைப் பெற்றாலும், அதைவிட அதிக மதிப்புள்ள ஒன்றைத் திருப்பிக் கொடுங்கள். ஒருவேளை அவருக்குத் தேவைப்படவில்லை என்றால், தேவையுள்ள யாருக்காவது கொடுங்கள். அது சமூகத்தில் பெரிய நல்விளைவை ஏற்படுத்தும்.
- உங்களுக்கு என்று இருக்கும் சில கொள்கைகளையும் பண்புகளையும் எந்தச் சூழலிலும் விட்டுக் கொடுக்காதீர்கள். 'சிக்னலில் சிவப்பு விளக்கு எரிந்தால் நின்றுதான் செல்வேன்' என்று கொள்கை வைத்திருந்தால், இரவு 12 மணிக்கு சிக்னல் எரிந்தாலும் நில்லுங்கள். 'இந்த நேரத்தில் விதியை மீறினால் என்ன', 'யார் பார்க்கப் போகிறார்கள்' என்பது போன்ற சமாதானங்கள், எதிர்காலத்தில் அதைவிடப் பெரிய விதிமீறல்களைச் செய்யத் தூண்டும்.
- உங்கள் செயல்களுக்கும், அவற்றின் விளைவுகளுக்கும் நீங்களே பொறுப்பு. ஏதோ ஒன்று தவறாகும்போது, அடுத்தவர்கள் மீது பழியைப் போடுவதில் எந்த நியாயமும் இல்லை. அதற்குப் பொறுப்பேற்றுக்கொள்ளுங்கள். நாம் என்ன செய்தோம், என்ன செய்திருக்க வேண்டும் என்று சுயபரிசோதனை செய்யுங்கள்.
- நேற்று எட்டடி பாய்ந்தால், இன்று 16 அடி தாவுவதற்கு ஆசைப்படாதீர்கள். வாழ்க்கை என்பது ரேஸ் அல்ல. படிப்படியாகவே உயர முடியும். நேற்றைவிட இன்று முன்னேற்றம் இருக்கிறதா என்று மட்டுமே பாருங்கள்.
- தனக்கு வசதியான சூழலில் இருந்துகொண்டு ஒருவர் செய்யும் செயல்கள் சாதாரணமாகத்தான் இருக்கும். தங்கள் பாதுகாப்பு வளையத்தைவிட்டு வெளியில் வந்து துணிச்சலுடன் செய்யும் முயற்சிகளே மிகச் சிறந்த பலனைக் கொடுக்கும். அச்சம் கடந்து அதைச் செய்யுங்கள்.
- சூழல் எப்படி இருந்தாலும், அதனால் சோர்ந்து போகாதீர்கள். எவ்வளவு மோசமான தருணத்திலும், ஒரு சின்ன விஷயமாவது ஆறுதல் தருவதாக இருக்கும். அதை நினைத்து, மனதை நேர்மறையாக வைத்துக்கொள்ளுங்கள்.

# புகழ்பெற்ற பவானி ஜமக்காளத்தை அறிமுகம் செய்யும் ராம்ராஜ் காட்டன்!





நம் பாரம்பரிய ஆடைகளைத் தரமாகவும் நேர்த்தியாகவும் பிரமாண்டமாகவும் வழங்குவதில் புகழ்பெற்ற, இந்தியாவின் நம்பர் 1 பாரம்பரிய ஆடை பிராண்டான ராம்ராஜ் காட்டன், இப்போது ஜமக்காளம் கலெக்ஷனை அறிமுகம் செய்கிறது. இந்தப் புதிய அறிமுகத்தின் மூலம், மக்கள் அணியக்கூடிய ஆடைகளில் மட்டுமல்லாமல், வீடுகளை அலங்கரிப்பதற்கான துறையிலும் ராம்ராஜ் அடியெடுத்து வைக்கிறது.

அண்ணா நூற்றாண்டு அரங்கில் நடைபெற்ற சிறப்புக் கலாசார நிகழ்வில் இந்தப் புதிய ஜமக்காள கலெக்ஷன் அறிமுகம் செய்யப்பட்டது. 'நம் எந்த ஒரு பாரம்பரியக் கைவினைக் கலையும் மக்களிடையே பெருமிதத்தையும், பெருமையையும் உருவாக்கினால் மட்டுமே மீண்டும் முக்கியத்துவம் பெறும்' என்று ராம்ராஜ் காட்டன் உறுதியாக நம்புகிறது. அதனால் புதிய வண்ணங்கள், நவீன வடிவங்கள் மற்றும் ஜமக்காளப் பைகள் போன்ற பயன்பாட்டுப் பொருட்கள் மூலம் பாரம்பரியமான ஜமக்காளத்தில் புதுமைகளையும் நவீன அம்சங்களையும் அறிமுகம் செய்துள்ளது.

இந்தப் புதிய முயற்சியை வெறுமனே தயாரிப்புப் பொருட்களுடன் நிறுத்திவிடாமல், ஜமக்காளத்தின் பாரம்பரியம் மற்றும் அதன் பண்பாட்டு முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வையும் ஏற்படுத்தியுள்ளது. அதற்காக ராம்ராஜ் நிறுவனம் இரண்டு நூல்களையும் இத்தருணத்தில் வெளியிட்டுள்ளது. அமர் ரமேஷ் அவர்களின் 'ஜமக்காளம்: பீப்பிள்ஸ் தறி ஆஃப் இந்தியா' என்ற சிறப்பு நூல், இந்தப் பாரம்பரியக் கலையின் பயணம், இதை உருவாக்கும் நெசவாளர்கள் மற்றும் அதன் வரலாற்றை நேர்த்தியாகப் பதிவு செய்திருக்கிறது. இதைத் தொடர்ந்து, கரடி டேல்ஸ் வெளியிட்ட 'ஃப்ரம் பவானி, வித் லவ்' மற்றும் அதன் தமிழ்ப் பதிப்பான 'அன்புடன் பவானி' என்ற விளக்கச் சித்திரங்கள் கொண்ட குழந்தைகள் நூலும் வெளியிடப்பட்டது. ஜமக்காளத்தை எளிமையாகவும் சுவாரஸ்யமாகவும், பண்பாட்டு ரீதியாகவும் குழந்தைகள் புரிந்துகொள்ள உதவும் இந்த நூல், நமது பாரம்பரியத்தின் மீது அவர்கள் பெருமை கொள்ளவும் வழிகாட்டுகிறது.

இந்த முயற்சி குறித்து, ராம்ராஜ் காட்டன்நிறுவனரும்தலைவருமான கே.ஆர்.நாகராஜன், "ராம்ராஜ் காட்டனில் எங்களது பயணம் எப்போதும் பண்பாடு மற்றும் பொறுப்புணர்வை அடிப்படையாகக் கொண்டது. பாரம்பரியம் என்பது வெறும் நினைவுகளாக மட்டும் இருந்து, படிப்படியாக மங்கி மறைந்து போகக்கூடாது. ஜமக்காளத்தை நவீன இல்லங்களுக்குக் கொண்டு செல்வதன் வழியாக, கடந்த காலத்துக்கும் எதிர்காலத்துக்கும் இடையே ஒரு பிணைப்பை நாங்கள் உருவாக்குகிறோம். நமது செழுமையான பாரம்பரியம், நவீன உலகில் தனக்கான இடத்தைப் பிடிக்கும்போது, அது அபாரமான வளர்ச்சியைப் பெற்றுத் தன்னை வலுவாக நிலைநிறுத்திக் கொள்ளும்" என்றார்.

நிகழ்வில், கல்வியாளர் திரு. சங்கர் வாணவராயர், கரடி கதைகள் பதிப்பக இயக்குநர் ஷோபா விஸ்வநாத், மூத்த கைத்தறி நெசவாளர் டி.தேவிசிகாமணி மற்றும் மாஸ்டர் வீவர் பி.சக்திவேல் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# மனிதவள மேம்பாட்டு பயிற்சி மையத்தில் ராம்ராஜ் காட்டன்!






பொதிகை மனிதவள மேம்பாட்டு பயிற்சி மையத்தின் 15–ஆம் ஆண்டு துவக்க விழா 17.03.2026 செவ்வாய்க்கிழமை மாலை திருப்பூரில் உள்ள R.P. மஹாலில் நடைபெற்றது. இந்த விழாவில் கல்வியாளர் டாக்டர் B.K.கிருஷ்ணராஜ் வாணவராயர் அவர்கள் தலைமைப் பொறுப்பேற்று 'நம்பிக்கை நகரம்' என்ற நூலை வெளியிட்டுச் சிறப்புரையாற்றினார். இப்புத்தகத்தின் முதல் பிரதியை ராம்ராஜ் காட்டன் நிறுவனர் – தலைவர் திரு. K.R. நாகராஜன் அவர்கள் பெற்றுக் கொண்டு உரையாற்றினார்.

டாக்டர் B.K.கிருஷ்ணராஜ் வாணவராயர் அவர்கள் தனது உரையில், "சித்தர்களாலும் மகான்களாலும் ஆசீர்வதிக்கப்பட்ட நமது பாரத பூமி என்றுமே அமைதியின் இருப்பிடமாகத் திகழும். எந்தவிதமான சோதனைகளையும் தாங்கும் வல்லமை படைத்தது நமது பாரத நாடு" என்று பெருமையாகக் குறிப்பிட்டார்.

ராம்ராஜ் காட்டன் நிறுவனர் – தலைவர் திரு.K.R.நாகராஜன் அவர்கள் தனது உரையில், ஒவ்வொரு தொழில் முனைவோரும் பின்பற்ற வேண்டிய ஐந்து முக்கியக் கொள்கைகளை விளக்கினார். "நேர்மை, படிப்படியாக முன்னேறுதல், நிதி நிர்வாகம், கடமை மறவாதிருத்தல் மற்றும் சக்தி வாய்ந்த தலைமை ஆகிய ஐந்து பண்புகளும் தொழிலின் வெற்றிக்கு அவசியம் தேவை" என்று குறிப்பிட்டார்.

விழாவுக்கான ஏற்பாடுகளைப் பொதிகை மனிதவள மேம்பாட்டு மையத்தின் நிறுவனர் திரு. பொதிகை சுந்தரேசன் ஏற்பாடு செய்திருந்தார். திரு.ஸ்கை V.சுந்தர்ராஜ், திரு.K.P.K.செல்வராஜ் மற்றும் பல முக்கியப் பிரமுகர்கள் விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.



# வேலையில் நன்மதிப்பைச் சம்பாதியுங்கள்!

பலரும் தங்கள் வீட்டில் செலவிடுவதைவிட அதிக நேரத்தைத் தங்கள் பணியிடத்தில் செலவிடுகிறார்கள். ஒருவர் செய்யும் வேலை, தொழில் அல்லது வியாபாரம்தான் அவருக்கு ஒரு சமூக அடையாளத்தை உருவாக்கித் தருகிறது. அது இல்லாமல் போய்விட்டால், வெறும் பெயர் மட்டுமே ஒருவருக்கு அடையாளமாக இருக்கிறது. அந்த வேலையில் ஒருவர் காட்டும் மதிப்பே, அவரது வாழ்க்கையைச் செதுக்குகிறது.

சிலர் தங்கள் வேலையில் ஒரு குறிப்பிட்ட இலக்கைச் சாதிக்கத் துடிப்பார்கள். சிலருக்கோ எந்த மன உளைச்சலும் இல்லாமல் நிம்மதியாக வேலை செய்தால் போதும் என்ற எண்ணம் இருக்கும். சிலருக்கு நிறைய கற்றுக்கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் இருக்கும். இப்படி தனிப்பட்ட மதிப்பீடுகள் ஒவ்வொருவருக்கும் மாறும். நிறுவனங்களிலும் சில விதிமுறைகள் இருக்கும். சில நிறுவனங்கள் காலையில் ஒன்பதரை மணிக்கு வராமல் தாமதம் செய்வதைக் கடும் குற்றமாகப் பார்க்கும். சில இடங்களில் தாமதமாக வந்தாலும், இரவு கூடுதல் நேரம் இருந்து வேலை செய்யலாம். எல்லா நிறுவனங்களும் ஒரே மாதிரி இருப்பதில்லை.

ஒருவர் வேலைக்குச் சேரும்போதே, தனது தனிப்பட்ட மதிப்புகளுடன் பொருந்திப் போகிற நிறுவனத்தில் இணைவதே பொருத்தமாக இருக்கும். இல்லாவிட்டால் அந்த வேலை அவருக்கு மகிழ்ச்சியோ, நிம்மதியோ தராது. தினமும் நமக்குப் பிடிக்காத ஒரு இடத்துக்கு வந்துபோவது போலவே மனம் நினைத்தால், மொத்த சக்தியும் அதில் வீணடிக்கப்படும். உற்சாகமாக வேலை பார்க்க முடியாது. வேலையில் கிடைக்கிற சம்பளத்தைத் தாண்டி மன நிறைவும் மிக முக்கியம். நாம் இந்த வேலையில் என்ன எதிர்பார்க்கிறோம், இந்த வேலை நம்மிடம் என்ன எதிர்பார்க்கிறது என்பதை உணர்ந்துகொண்டு உழைக்கும்போதே மனநிறைவு கிடைக்கும்.

எனவே, நீங்கள் எதையெல்லாம் உயர்வாக மதிக்கிறீர்களோ, அந்த விஷயங்களை உயர்வாக நினைக்கும் ஒரு நிறுவனத்தில் பணியில் சேருங்கள். அப்போதுதான் உங்கள் தனித்தன்மையை அந்த நிறுவனம் புரிந்துகொள்ளும். நீங்களும் அதைப் பயன்படுத்தி நிறுவனத்தை உயர்த்தலாம், அதன்மூலம் உங்கள் தனிப்பட்ட தகுதியையும் உயர்த்திக்கொள்ளலாம். உங்களைத் தங்களின் மதிப்பான சொத்து என அந்த நிறுவனம் நினைக்கும்.

**வேலையில் மதிப்பை வெளிப்படுத்துவது எப்படி? இதோ சில வழிகள்:**

- பொறுப்புகளை எப்போதும் தட்டிக் கழிக்காதீர்கள். முக்கியமான வேலைகளைத் தானாக முன்வந்து ஏற்றுச் செய்து, அவை நல்லபடியாக முடியும்வரை எல்லோருடனும் இணைந்து உழைப்பது உங்கள் மதிப்பை உயர்த்தும். அதேபோல உங்களுக்குக் கீழே இருப்பவர்களுக்கும் பொறுப்புகளைப் பகிர்ந்து கொடுங்கள். அவர்களிடம் தலைமைப்பண்பு வளரும்.
- நீங்கள் செய்ய வேண்டிய வேலைகளை மற்றவர்கள் தலையில் சுமத்தாதீர்கள். சக ஊழியர்கள் மத்தியில் உங்கள் மதிப்புக் குறைந்துவிடும். நீங்கள் ஓய்வாக இருக்கும் நேரங்களில், மற்றவர்களின் வேலைகளைத் தானாகவே முன்வந்து பகிர்ந்துகொண்டு செய்யுங்கள், உங்கள் மதிப்பு உயரும்.

- ஒரு வேலையை அரைகுறையாகச் செய்து, அது தவறாகித் திரும்பத் திரும்பச் செய்ய வேண்டியிருப்பது எல்லோரையும் எரிச்சலில் தள்ளும். ஒரு வைரத்தைப் பட்டை தீட்டுபவர் கொஞ்சம் கவனம் பிசகினாலும், வைரத்தின் மதிப்புக் குறைந்துவிடும். அவர் சரியாகத் திட்டமிட்டு அதன் வடிவத்தையும் அளவையும் தீர்மானித்துக்கொண்டு செதுக்குகிறார். வேலைகளைச் சரியாகத் திட்டமிட்டு, நேர்த்தியாகச் செய்யுங்கள்.
- 'இவரிடம் இந்த வேலையைக் கொடுத்தால், குறித்த நேரத்துக்குள் முடித்துவிடுவார்' என்று மேலதிகாரிகள் நம்பும் மனிதராக இருங்கள். அதேபோலச் சக ஊழியர்களும், கீழே இருப்பவர்களும் உங்களை நம்பி வந்து வேலைகள் பற்றிப் பகிர்ந்துகொள்ள வேண்டும். வேலையில் எழும் சந்தேகங்களைக் கேட்க வேண்டும்.
- பணியிடத்தில் பலவிதமான நெருக்கடிகள் வரலாம், எதிர்பாராத இழப்புகள் நேரலாம். அதுபோன்ற நேரங்களில் எதிர்மறை உணர்வு பரவினால், அது நிறுவனத்துக்கே இழப்பை ஏற்படுத்தும். எப்படிப்பட்ட சவாலான தருணத்திலும் நேர்மறையான மனநிலையுடன் இருங்கள். மற்றவர்களுக்கும் அதே உற்சாகத்தைப் பரப்புங்கள்.
- நேரத்துக்கு மதிப்புக் கொடுங்கள். சரியான நேரத்தில் அலுவலகத்துக்கு வந்து, உங்கள் வேலைகளைச் சரியாக முடிப்பது மட்டும் போதாது. மற்றவர்களின் நேரத்தையும் மதித்து நடந்துகொள்ளுங்கள். அவர்கள் வேலைகளைக் குறித்த நேரத்தில் முடிக்க உதவுங்கள். அந்த வேலைகள் உங்களால் தேங்கிவிடக்கூடாது.
- உங்கள் குழுவில் இருக்கும் எல்லோருக்குள்ளும் தகவல்தொடர்பு தெளிவாக இருக்கட்டும். என்ன வேலை செய்கிறோம் என்பது தெரிந்தால்தான், அதை எப்படிப் பகிர்ந்துகொண்டு செய்வது என முடிவு செய்யலாம். நேர்மையாகவும் வெளிப்படையாகவும் எல்லோருடனும் உரையாடுங்கள்.
- மேலே இருப்பவர்களுக்கு மரியாதை கொடுப்பது போலவே, உங்களுக்குச் சமமாக இருப்பவர்களுக்கும் கீழே இருப்பவர்களுக்கும் உரிய மரியாதை கொடுங்கள். அதே மரியாதையை நீங்களும் பெறுவீர்கள். உங்கள் வேலைக்கு உரிய அங்கீகாரத்தை எதிர்பாருங்கள், அடுத்தவர்களுக்குக் கிடைக்க வேண்டிய அங்கீகாரத்தைப் பறித்துக்கொள்ளாதீர்கள்.
- ஒரு நிறுவனத்தில் பணிபுரியும்போது, அந்த நிறுவனத்துக்கு விசுவாசமாக இருங்கள். நீங்கள் வேலை செய்பவராக இருந்தாலும், அந்த நிறுவனம் உங்களுக்குச் சொந்தமானது என்பது போலக் கருதி உரிமை எடுத்துக்கொண்டு செயல்படுங்கள்.
- நீங்கள் எந்தத் துறையில் இருந்தாலும், அதுசார்ந்து தொடர்ச்சியாகக் கற்றுக்கொண்டே இருங்கள். நிறுவனம் அதை ஊக்கப்படுத்தினாலும், இல்லாவிட்டாலும், கற்றுக்கொள்வதை நிறுத்தாதீர்கள். அதேபோல அடுத்தவர்களுக்கும் கற்றுக்கொடுக்கத் தயாராக இருங்கள்.
- உங்கள் வேலையின் மூலம் நிறுவனத்தில் என்ன மாற்றத்தை ஏற்படுத்தி இருக்கிறீர்கள் என்பதைக் கவனியுங்கள். உங்கள் தனிப்பட்ட சாதனைகளுக்கு மதிப்புக் கொடுங்கள். நீங்கள் சாதிக்கும் அதே நேரத்தில், நிறுவனமும் அந்தச் சாதனையால் உயர்வு பெறுவது அவசியம். ●


**வெண்மை சந்தா...**

# மகளிர் தின சிறப்புச் சலுகை!



மார்ச் 8-ம் தேதி கொண்டாடப்படும் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு வெண்மை மாத இதழுக்கான சந்தா தொகையில் இந்த ஆண்டு முழுக்க சந்தா செலுத்தும் பெண்களுக்குச் சிறப்புச் சலுகை வழங்கப்படுகிறது.

**ஓர் ஆண்டு சந்தா: ரூ. ~~200~~/–**
**மகளிர் சலுகை சந்தா: ரூ. 150/–**

**இரண்டு ஆண்டுகள் சந்தா: ரூ. ~~380~~/–**
**மகளிர் சலுகை சந்தா: ரூ. 300/–**

இச்சலுகையை முழுமையாகப் பயன்படுத்தி மகளிர் தங்களையும் தங்கள் இல்லத்தையும் சுற்றத்தையும் இன்னும் சிறப்பாகப் பேணி நலம் பெற வேண்டுகிறோம். (சந்தா செலுத்தும் வழிமுறைகளுக்கு 23-ம் பக்கத்தைப் பார்க்கவும்.)



## இது மதிப்பானது இல்லை!

சாலையோரத்தில் கடை போட்டு மாம்பழம் விற்பவரிடம் பேரம் பேசினார் ராகவன். இவர் கேட்ட விலையிலிருந்து கொஞ்சம் ஏறி வந்து, கடைக்காரர் சொன்ன விலையிலிருந்து கொஞ்சம் இறங்கி வந்திருந்தாலும், இன்னும் 10 ரூபாயில் பிடிவாதமாகப் பேரம் தொடர்ந்தது. அந்த 10 ரூபாய் பெரிய விஷயமில்லை என்றாலும், 'நான் கேட்கிறேன், இவன் குறைக்க மாட்டேன் என்கிறானே' என்ற ஈகோதான் ராகவனை ஆக்கிரமித்து இருந்தது.

"நீ குறைக்கலைன்னா எனக்கு வேண்டாம்பா!" என்று சொல்லிவிட்டு ராகவன் நகர ஆரம்பித்தார். கடைக்காரர் கூப்பிட்டு, "ஐயா, காலையில் நீங்கதான் முதல் போணி. நீங்க வாங்காம போனா, நாள் முழுக்க வியாபாரம் இருக்காது. நீங்க கேட்ட விலைக்கே வாங்கிக்கங்க'' என்று சொன்னார். மாம்பழங்களை எடை போடும்போது அவர் தலையைக் குனிந்துகொண்டே, "ஐயா, நான் என்ன விலைக்கு வாங்கினேனோ, அந்த விலைக்குதான் இப்ப தர்றேன். நான் விடாப்படியா பேரம் பேசின 10 ரூபாய்தான் என் லாபம். இப்படி பத்து, பத்து ரூபாயா சம்பாதிச்சாதான் வீட்டுல அடுப்பு எரியும். இதையும் இழந்துட்டா, அது எங்க சாப்பாட்டைப் பாதிக்கும்" என்றார்.

ராகவனை அந்த வார்த்தைகளில் இருந்த உண்மை சுட்டது. மாம்பழங்களை வாங்கிய பிறகு 10 ரூபாய்க்கு 20 ரூபாயாகச் சேர்த்துக் கொடுத்தார். கடைக்காரர் அதை வாங்கவில்லை. "அது தப்புங்க ஐயா! நான் ஒப்புக்கிட்ட விலைக்கு மேல காசு வாங்கக்கூடாது" என்று மறுத்தார்.

எங்கெங்கோ காரணமே இல்லாமல் 10 ரூபாய், 20 ரூபாய் என இழக்கிறோம். இதுபோன்ற கடைக்காரர்களிடம் பேரம் பேசுகிறோமே என்று ராகவன் அப்போது நினைத்தார். அதன்பிறகு முரட்டுத்தனமாகப் பேசும் இடங்களைத் தவிர மற்ற இடங்களில் அவர் பேரம் பேசுவதில்லை. பொருளின் மதிப்பை உணர்ந்து பணம் கொடுத்துவிடுவார்.

## மதிப்பான வாழ்க்கைநெறிகள்!

சமூகத்தில் மதிப்புடன் வாழ்வதற்குத் தலாய் லாமா சொன்ன 10 வாழ்க்கைநெறிகள்:

- நம் வாழ்க்கையின் நோக்கம், மகிழ்ச்சியாக இருப்பதுதான்.
- மகிழ்ச்சி வெளியில் எங்கிருந்தும் கிடைக்காது, நாம் செய்யும் செயல்களின் மூலமே கிடைக்கிறது.
- நெருக்கடியான நேரங்களிலும் கனிவாக இருக்கப் பழகுங்கள். அதுவே உங்கள் அடையாளம் ஆகிவிடும்.
- நலவாழ்வு என்பது பிரார்த்தனைகளின் மூலம் கிடைப்பதில்லை, நம் செயல்களின் வழியாகவே கிடைக்கிறது.
- தூக்கமே மிகச்சிறந்த தியானம். அதைத் தவறவிடாதீர்கள்.
- அன்பும் கருணையும் ஆடம்பரப் பொருட்கள் இல்லை, அத்தியாவசியப் பொருட்கள். அவை உங்களிடம் நிரம்பி வழிய வேண்டும்.
- சகிப்புத்தன்மையைப் பழகுங்கள். உங்கள் எதிரியே உங்களின் மிகச்சிறந்த ஆசானாக மாறுவார்.
- நன்றியுணர்வை மறக்காதீர்கள். எல்லா உதவிகளுக்கும் நன்றி சொல்லும்போது, அடுத்தவர்கள் மீது மிகப்பெரிய மதிப்பு வரும்.
- கற்றுக்கொள்வதன் மூலம் அறியாமையை விரட்டுங்கள். அப்போதுதான் உண்மையான அமைதி கிடைக்கும்.
- எவரிடமும் கனிவு காட்டுவதும், அடுத்தவர் நலனில் அக்கறை செலுத்துவதும், நிஜமான மகிழ்ச்சியை நிலைபெறச் செய்யும்.

## நன்மதிப்புகள் எங்கிருந்து வரும்?

வாழ்வில் எதுவுமே உடனடியாகக் கிடைத்துவிடாது. எல்லாவற்றுக்கும் நீண்ட காலச் செயல்பாடுகள் வேண்டும். நீண்ட காலம் நிலைத்திருக்கும் உறவுகளிடமிருந்தே அன்பு கிடைக்கும். நீண்ட காலம் நல்ல பழக்கங்களைக் கடைப்பிடிப்பதால்தான் ஆரோக்கியம் கிடைக்கும். நீண்ட காலம் முதலீடுகளைச் செய்து வருவதால்தான் செல்வம் கிடைக்கும். நீண்ட காலமாகச் செய்து வரும் முயற்சிகளால்தான் திறமையும் வெற்றியும் கிடைக்கும். நீண்ட காலம் மனதைப் பக்குவப்படுத்துவதால்தான் மன அமைதி கிடைக்கும்.



## வாழ்நாள் மதிப்புக்கு வழிகள்!



- இன்று சேமிக்காவிட்டால், நாளை கடனில் விழுந்து அவமானப்பட வேண்டியிருக்கும். எப்போதும் எதிர்காலத்துக்குத் திட்டமிடுங்கள்.
- வெற்றிகரமான மனிதர்களைப் பின்பற்றுங்கள். அவர்களிடம் பேசி வழிகாட்டுதல் பெறுவது, உங்களை வெற்றியாளராக வைத்திருக்கும்.
- மேலதிகாரிகளைப் புகழ்ந்து பேசியும் நல்ல பெயர் வாங்கலாம், உங்கள் திறமையான வேலையாலும் நல்ல பெயர் வாங்கலாம். இரண்டாவது வழியை எப்போதும் பின்பற்றுங்கள்.
- வாழ்க்கையில் மதிப்பான எல்லாப் பொருட்களுக்கும் ஒரு விலை இருக்கிறது. எதுவுமே இலவசம் இல்லை என்பதைப் புரிந்துகொள்ளுங்கள்.
- ஒன்றுமே செய்யாமல் இருப்பவர்களை யாரும் விமர்சனம் செய்வதில்லை. அதிகமாக வேலை செய்பவர்கள்தான் அதிக விமர்சனங்களுக்கு ஆளாவார்கள். விமர்சனங்களுக்கு நொறுங்கிவிடாதீர்கள்.

### நன்மதிப்புகள் நான்கு!

வாழ்வில் எல்லோரும் அடைய வேண்டிய நன்மதிப்புகள் நான்கு. உடல் ஆரோக்கியமே மிகப்பெரிய பரிசு. எதிலும் நிறைவு பெறும் உணர்வே, மிகச்சிறந்த செல்வம். நம்பிக்கையே மிகப்பெரிய உறவு. சுதந்திரமாகச் சிந்திக்கும் மனமே மிகப்பெரிய வரம்.

## உண்மையான மதிப்புகளை உணர்வோம்!

- 'இவர் திமிர் பிடித்தவர்', 'இவர் நாம் சொல்வதை எப்போதும் கேட்க மாட்டார்', 'இவர் எப்போதும் எதிர்த்தே பேசுவார்' என்பது போல மனிதர்களை முத்திரை குத்தாதீர்கள். அவர்கள் ஏன் அப்படி நடந்துகொள்கிறார்கள் என அவர்களின் நிலையிலிருந்து நினைத்துப் பாருங்கள். மனிதர்களை முன்முடிவுகளுடன் அணுகுவதைவிட, கனிவுடன் அணுகுவது பலன் தரும்.
- குப்பைகளை அகற்றுபவர் நான்கைந்து நாட்கள் வராமல் போனால், நம் தெருக்களின் நிலையை நினைத்துப் பாருங்கள். ஒவ்வொருவர் செய்யும் வேலையும் அவரளவில் மதிப்புமிக்கது. அது நேரடியாகவோ, மறைமுகமாகவோ இந்தச் சமூகத்துக்கு உதவுகிறது. எல்லோருக்கும் மதிப்புக் கொடுங்கள்.
- தற்பெருமை பேசாதீர்கள். மற்றவர்களைவிட உங்களை உயர்வானவராக நினைத்துக்கொள்ளாதீர்கள். நிலை உயரும்போது பணிவு கொண்டால்தான் உலகம் உங்களுக்கு மதிப்புக் கொடுக்கும்.
- நம்மைவிடவும் கீழான நிலையில் இருப்பவர்களைத் திட்டும்போதும் கிண்டல் செய்யும்போதும் அவர்கள் எதிர்த்துப் பேச மாட்டார்கள். ஆனால், அவர்கள் அதில் அவமானப்பட்டுத் தாழ்வு மனப்பான்மையில் விழுவார்கள். எவரையும் கீழ்மையாக நடத்தாதீர்கள்.
- அடுத்தவர்களை உற்சாகப்படுத்துங்கள், சாதிக்கத் தூண்டுங்கள். உங்களால் ஒருவரின் வாழ்க்கை மாறும்போது, உங்களுக்குக் கிடைக்கும் மதிப்பே தனி. அது உங்களுக்கு மகிழ்ச்சியையும் மன நிறைவையும் கொடுக்கும். இப்படி அர்த்தமுள்ள மதிப்புகளை அடையுங்கள்.





# உறவுகளுக்கு மதிப்புக் கொடுங்கள்!

கல்லூரியில் படிக்கும்போது சக மாணவி மீது காதல் கொண்டான் ஒருவன். அவள் பின்னாலேயே சுற்றினான். அவனைத் திரும்பிப் பார்க்கவே இல்லை அவள். அதுவரை நன்றாகப் படித்துக்கொண்டிருந்த அவன், அதன்பின் படிப்பில் தடுமாறினான். ஒருநாள் வகுப்பறையில் எல்லோர் முன்பாகவும் பேராசிரியர் அவனை மோசமாகத் திட்டினார். “நீ நல்லா படிச்சு கல்லூரிக்கு நல்ல பேர் வாங்கித் தருவேன்னு எதிர்பார்த்தேன். ஆனால், இப்படி மார்க் வாங்க முடியாத முட்டாளா ஆகிட்டியே” என்றார். அவன் தலைகுனிந்தபடி நின்றிருக்க, வகுப்பில் பலரும் அவளையே திரும்பிப் பார்த்தனர்.

அன்று மாலை கல்லூரி முடிந்ததும் அவனைத் தனியாக அழைத்தாள் அவள். “அன்பு காட்டறதுன்னா என்னன்னு நினைச்சுக்கிட்டு இருக்கே! இப்படி படிப்பைத் தொலைச்சிட்டு என் பின்னாலேயே அலைஞ்சா, நான் பரிதாபப்பட்டு உன்னைக் காதலிப்பேன்னு எப்படி நினைக்கலாம். நிஜமா என் மேல உனக்கு அன்பு இருந்தா, நல்லா படிச்சு மார்க் வாங்கி அதை நிரூபித்துக் காட்டு. படிப்பை முடிச்சிட்டு நல்ல வேலையில சேர்ந்துட்டு, உரிமையோட வந்து எங்க அப்பா, அம்மாகிட்ட பேசு. அதை விட்டுட்டு வாழ்க்கையைத் தொலைச்சிடாதே” என்று கண்டிப்பான குரலில் சொல்லிவிட்டுப் போனாள்.

அதன்பின் அவன் சலனம் இல்லாமல் படித்தான். கல்லூரியிலேயே முதல் மாணவனாகத் தேர்ச்சி பெற்றான். அவனை வேலைக்குத் தேர்வு செய்ய நிறுவனங்கள் போட்டி போட்டன. அதில் சிறந்த நிறுவனத்தை அவன் தேர்வு செய்தான். அதேபோல அவளும் நல்ல வேலைக்குப் போனாள். சில ஆண்டுகளில் இருவருமே தங்கள் வீடுகளில் விஷயத்தைச் சொல்லி, முறையாக அனுமதி பெற்றுத் திருமணம் செய்துகொண்டார்கள்.

உறவுகளுக்கு மதிப்புக் கொடுப்பது என்பது, அவர்கள் விரும்பும் வகையில் வாழ்ந்து காட்டுவதுதான். அவர்களையும் நல்லபடியாக வாழவைத்துக் காட்டுவதுதான். பரஸ்பரம் அன்பைப் பகிர்ந்துகொள்வது எவ்வளவு முக்கியமோ, அதே அளவு முக்கியமானது அவர்களுக்கு மதிப்புக் கொடுப்பது. திருமணத்தின் மூலம் புதிதாக ஓர் உறவு மலரும்போது, அதில் பரவசம் ஏற்படும். ஒருவரைப் பற்றி இன்னொருவர் பேசிப் பேசித் தெரிந்துகொள்ளும் தகவல்கள் இருவருக்குமே ஆச்சர்யம் தரும். அதைத் தாண்டி ஒருவரின் நலனில் இன்னொருவர் எவ்வளவு அக்கறை காட்டுகிறார், அவரின் ரசனைகளுக்கும் விருப்பங்களுக்கும் எவ்வளவு மதிப்புக் கொடுக்கிறார் என்பதே அந்த உறவில் ஆழமான பிணைப்பை ஏற்படுத்துகிறது.

கணவன் – மனைவி உறவு என்றில்லை, எல்லா உறவுகளுமே மேலோட்டமாகப் பார்க்கும்போது இனிமையான ஒன்றாகவே தெரியும். ஆனால், ஒரு செடி போல அதற்கு உரமிட்டு வளர்த்து, இனிமையான அதன் கனிகளைப் பெறுவது என்பது விவசாயம் போலவே நீண்ட உழைப்பும் அர்ப்பணிப்பும் தேவைப்படும் செயல். அன்பு, ஈர்ப்பு, அக்கறை ஆகியவற்றுடன் பரஸ்பர நம்பிக்கையும் இதற்குத் தேவை. நிறைய விட்டுக்கொடுக்கவும் வேண்டியிருக்கும்.



உதாரணமாக, ஒருவருக்குச் சண்டைக் காட்சிகள் நிறைந்த திரைப்படங்கள் பிடிக்கலாம். அவர் மனைவிக்கு அமைதியாகப் படம் பார்க்கவே பிடிக்கும். ஒருவருக்கு ஆர்ப்பாட்டமான இசைக்கச்சேரிகள் பிடிக்கலாம். அவர் மனைவிக்கோ அமைதியாகப் போய் ஒரு பூங்காவில் கணவருடன் உட்கார்ந்து உரையாடப் பிடித்திருக்கும். இந்த ரசனை வித்தியாசங்களில் சில விட்டுக் கொடுத்தல்கள் தேவை. "நான் விரும்பியபடிதான் நீ இருக்க வேண்டும்" என்று கட்டளை போடுவது, உறவுகளில் உணர்வுரீதியாக விரிசலை ஏற்படுத்திவிடும். வாழ்க்கையின் மிக முக்கியமான முடிவுகள் என்றில்லை, 'இன்றைக்கு இரவு என்ன சாப்பிடலாம்' என்ற சாதாரண விஷயம்கூடச் சரியாகப் புரிந்துகொள்ளப்படவில்லை என்றால், ஆழமான மனவேறுபாட்டுக்குக் காரணமாகிவிடும்.

**இதுபோன்ற முரண்பாடுகளைத் தவிர்க்க என்ன செய்யலாம்?**

- இருவரும் பரஸ்பரம் தங்கள் உணர்வுகள், தேவைகள் குறித்து வெளிப்படையாகப் பேசுங்கள். உங்கள் உறவினர் பேசுவதையும் காதுகொடுத்துக் கேளுங்கள். வெளிப்படையான இந்தப் பேச்சு, பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு உதவ வேண்டும். பரஸ்பரம் குற்றம் சாட்டி, புதிய பிரச்னைகளை ஏற்படுத்தக்கூடாது.
- குடும்பம், குழந்தைகள், அவர்களின் தேவைகள் ஆகியவற்றுக்கு எப்போதும் முன்னுரிமை கொடுங்கள். இந்த விஷயத்தில் எல்லோருக்குமே நிறைய எதிர்பார்ப்புகள் இருக்கும். அந்த எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்யுங்கள். உங்கள் குடும்பப் பொறுப்புகளை எதையும் காரணம் காட்டித் தவிர்க்காதீர்கள்.
- சமமாக நடத்துவது, பரஸ்பரம் மரியாதை கொடுப்பது ஆகியவற்றின் மூலம் முரண்பாடுகளைத் தவிர்க்கப் பாருங்கள். வெளியில் சந்திக்கும் எந்தப் பிரச்னையும் வீட்டில் எரிச்சலையோ, கோபத்தையோ உருவாக்கிவிடக்கூடாது.
- உறவில் உண்மையாக இருங்கள். 'எதையும் இவரிடம் நம்பிச் சொல்லலாம்' என்ற உணர்வை எப்போதும் கொடுங்கள். எல்லாவற்றையும் தாண்டி பரஸ்பரம் ஒருவர் மீது இன்னொருவர் நம்பிக்கை வைப்பதும், எல்லாப் பிரச்னைகளையும் இருவருமாக இணைந்து எதிர்கொள்வதும், உறவை இறுக்கமாக்கும்.
- ஒரு விஷயத்தை நீங்கள் பார்க்கும் கோணமும், அவர் பார்க்கும் கோணமும் வேறாக இருக்கலாம். அவர் சொல்லும் ஒரு விஷயத்தை, வெளிப்படுத்தும் ஓர் உணர்வை முழுமையாகக் கேளுங்கள். உங்கள் தனிப்பட்ட நம்பிக்கைகள், விருப்பங்களை ஒதுக்கி வைத்துவிட்டு, அவரது நிலையிலிருந்து அதைப் பாருங்கள். இருவருக்கும் முரண்பாடு வராது.
- நல்ல விஷயங்களைச் செய்யும்போது மனம்திறந்து பாராட்டுங்கள். தவறுகளைச் செய்யும்போது மனப்பூர்வமாக மன்னித்துவிடுங்கள். சின்னச்சின்னத் தவறுகள், உங்களின் நீண்டகாலப் பயணத்துக்கான பாதையைக் கரடுமுரடாக மாற்றிவிடக்கூடாது.
- வாழ்வில் உங்களுக்கு எது நிறைவு தருகிறது என்று பாருங்கள்; நீங்கள் நேசிக்கும் உறவினருக்கு எதில் நிறைவு கிடைக்கிறது என்று பாருங்கள். இந்த இரண்டு விஷயங்களையும் நிறைவேற்றப் பாருங்கள்.
- வேலை, தொழில் அல்லது வியாபாரம் என்று எதிலும் உங்கள் தனிப்பட்ட வளர்ச்சிக்கு என்ன செய்ய வேண்டும் என்பதைத் திட்டமிட்டுச் செய்யுங்கள். அதேபோல உங்கள் உறவினரின் வளர்ச்சிக்கும் உதவுங்கள். இருவரின் உடல்நலனிலும் மனநலனிலும் அக்கறை காட்டுங்கள். நெருக்கடியான நேரங்களில் கனிவாக இருந்து அவர்களை மீட்டெடுங்கள்.
- வாழ்வின் அடிப்படைத் தேவைகளுக்கான பொருட்கள், சேமிப்பு, கையிருப்பு என்று எல்லாவற்றையும் கவனமாகச் செய்துகொடுங்கள். செலவுகள் விஷயத்தில் முரண்பாடு ஏற்படாதபடி பரஸ்பரம் பேசுங்கள்.
- உங்களது நடத்தை அவரை எந்த அளவு பாதிக்கிறது என்பதைப் புரிந்துகொண்டு செயல்படுங்கள். அப்படிப்பட்ட செயல்களை மாற்றிக்கொள்ளுங்கள். உறவின் நலனுக்காக அனுசரித்துப் போவதில் எந்தத் தவறும் இல்லை.
- எவ்வளவு நெருக்கமான உறவாக இருந்தாலும், அவர்களுக்கு என்று சில அந்தரங்க விஷயங்கள் இருக்கும். அவற்றுக்கு மதிப்புக் கொடுங்கள். தேவையின்றி அதையெல்லாம் நோண்டாதீர்கள்.



## எது மதிப்பானது?

ஒரு குருவுக்குத் தனது இளம் சீடனின் நடவடிக்கைகள் புதிராக இருந்தன. குருவிடம் படிக்கும் மற்ற எல்லோருமே எளிமையாக இருந்தனர். ஆனால் இவன் மட்டும் தன்னை ஒப்பனை செய்துகொள்வதில் கவனம் செலுத்தினான். சீப்பு முதல் கைக்குட்டைகள் வரை ஏராளமான பொருட்களைச் சேகரித்து வைப்பதில் ஆர்வம் காட்டினான். ஒருநாள் குரு தன் சீடர்களுடன் அரண்மனைக்குப் போயிருந்தார். மன்னரும் அவரது முன்னாள் சீடர் என்பதால், அன்பாக உபசரித்து பல விஷயங்கள் பேசினார். அப்போது இந்த இளம் சீடன் வித்தியாசமாகத் தெரியவே, அவனைப் பற்றி விசாரித்தார். குருவும் தன் கவலையைச் சொன்னார்.

மறுநாள் மன்னர் தன் குருவையும் சீடர்களையும் தலைநகரை ஒட்டிய ஆற்றங்கரைக்கு அழைத்துப் போனார். ஆற்றில் அவர்கள் குளித்துவிட்டு வந்து சாப்பிடுவதற்காக அங்கே விருந்து தயாரானது. அவர்கள் குளிக்கும்போது ஒரு வீரன் பதற்றத்துடன் ஓடிவந்து, “மன்னரே, அரண்மனை தீப்பற்றி எரிகிறது” என்று சொன்னான். அங்கே இருந்த பலரும் அதிர்ச்சி அடைய, இந்த இளம் சீடன் தன் பொருட்கள் தீயில் கருகிவிடுமே என்ற கவலையுடன் அரண்மனையை நோக்கி ஓடினான்.

கொஞ்ச தூரம் ஓடியதும் அவன் திரும்பிப் பார்த்தபோது, மன்னர் அமைதியாக நீராடிக் கொண்டிருந்தார். அவனுக்கு அது புதிராக இருந்தது. திரும்பிவந்து அவரைப் பார்த்து, “மன்னா, உங்கள் அரண்மனை தீயில் எரிகிறது. நீங்கள் இப்படி பதற்றமே இல்லாமல் இருக்கிறீர்களே?” என்றான். “அந்த அரண்மனை எப்படி என்னுடையதாகும்? நான் பிறப்பதற்கு முன்பே அது இருந்தது. இப்போதும் வீரர்கள் தீயை அணைத்துவிடுவார்கள். அது நான் இறந்த பிறகும் இங்கேயே இருக்கும். இதில் நான் பதற்றப்பட என்ன இருக்கிறது?” என்றார் மன்னர். மதிப்பற்ற விஷயங்களுக்கு மதிப்புக் கொடுக்கும் தவறைச் செய்கிறோமே என, சீடன் வெட்கத்தில் தலை கவிழ்ந்தான்.

## மதிப்பை அறியுங்கள்!

ஒரு வீட்டில் ‘பேசும் நாய் விற்பனைக்குக் கிடைக்கும்’ என்ற விளம்பரப் பலகையைப் பார்த்தான் ஒருவன். ஆச்சர்யப்பட்டு உள்ளே போனான். கூண்டில் அடைபட்டிருந்த நாய் அவனைப் பார்த்து ‘வணக்கம்’ சொன்னது. எகிப்திய பிரமிடுகள், அமெரிக்காவின் நயாகரா நீர்வீழ்ச்சி என, தான் உலகம் முழுக்கப் பயணம் செய்து பார்த்த விஷயங்கள் குறித்து விவரித்தது. வந்தவன் பிரமித்துப் போய், ‘இந்த நாயை என்ன விலை கொடுத்தாவது வாங்கிவிட வேண்டும். இதைப் பேசவைத்து பல நகரங்களில் நிகழ்ச்சிகள் நடத்தினால் லட்சங்களில் சம்பாதிக்கலாம்’ என்று முடிவு செய்துகொண்டு அந்த வீட்டு உரிமையாளரிடம் பேசினான்.



அவனோ, “நூறு ரூபாய் கொடுத்துட்டு அந்த நாயைத் தூக்கிட்டுப் போங்க” என்றான். “ஏன் இவ்வளவு விலை குறைவாக விற்கிறாய்?” என்று கேட்டபோது, “அது பிறந்ததுல இருந்து இந்த ஊரைத் தாண்டி எங்கேயும் போனதில்லை. டி.வி–யில நியூஸ் பார்த்துட்டு, எங்கே எங்கேயோ போனதா பொய் பேசிக்கிட்டு இருக்கு. எனக்கு அது பிடிக்கலை” என்றான். தன் நாயின் பேசும் திறமையை மதிக்கத் தெரியாத அந்த உரிமையாளரைக் கண்டு திகைத்து நின்றான், வந்தவன்.

உயரிய எதற்கும், அது இருக்கும் இடத்தைப் பொறுத்தே மதிப்பு!



## மதிப்புக் குறைவதில்லை!

பேரன் அசோக்குடன் வாக்கிங் போனார் தாத்தா. அப்போது, மாட்டின் கால்களில் அடித்திருக்கும் லாடம் ஒன்றைச் சாலையில் பார்த்த தாத்தா, பத்திரமாக அதை எடுத்துக்கொண்டார். ‘‘போங்க தாத்தா, இப்படித்தான் ரோட்டுல இருக்கற எதை எதையோ எடுக்கறீங்க. ஏன்தான் இப்படிக் குப்பையா இருக்கீங்களோ” என்று கோபித்துக்கொண்டான் பேரன். ‘‘இந்த லாடம் ஏதாவது வாகனச் சக்கரத்துல குத்தினா, டயர் வீணாகிடும் அசோக். அதுமட்டுமில்லை, இந்த இரும்புக்கு மதிப்பு உண்டு” என்று தாத்தா சொன்னது அவன் கோபத்தைக் குறைக்கவில்லை.

அடுத்த நாள் அசோக் பள்ளி முடிந்து வந்ததும், “உனக்கு பிஸ்கெட் வாங்கிட்டு வரலாம்” என்று தாத்தா கூப்பிட, ஆர்வமாக அவருடன் போனான் அசோக். வழியில் வேண்டுமென்றே தன் கையில் இருந்த 20 ரூபாய் நாணயத்தை தாத்தா கீழே போட, அசோக் அவசரமாக அதை எடுத்தான். “அதை ஏன் எடுத்தே?” என்று தாத்தா கேட்க, “20 ரூபாய் தாத்தா, அதை ரோட்டுல விடமுடியுமா?” என்றான்.

“நேத்து லாடம் எடுத்தேனே, அப்படி பழைய இரும்பு, பிளாஸ்டிக்கைக் கொடுத்துட்டு வாங்கின காசுதான் இது. பணமா பார்க்கும்போது மதிப்பா தெரியுது. பொருளுக்கும் மதிப்பு இருக்கு. அந்த பிளாஸ்டிக்கும் இரும்பும் மறுசுழற்சி ஆகி புதிய பொருளா நமக்குத் திரும்பி வருது” என்று மதிப்புப் பாடம் எடுத்தார் தாத்தா.

## சின்ன விஷயம் இல்லை!

நண்பனைப் பார்க்க ரயிலில் சென்ற வருண், போகும்போதே ரிட்டர்ன் டிக்கெட்டையும் சேர்த்து எடுத்துக்கொண்டான். நகரின் ஒரு மூலையிலிருந்து இன்னொரு மூலைக்குச் செல்லும் அந்தப் பயணத்துக்கான கட்டணம் வெறும் ஐந்து ரூபாய் மட்டுமே! நண்பனைப் பார்த்து அவனுடன் பல மணி நேரம் சுற்றினான். “சாயந்திரம் நானே உன்னை வீட்டில் விடுகிறேன்” என்று நண்பன் சொன்னான். சாப்பிடும்போது பாக்கெட்டிலிருந்து பணத்தை எடுத்த வருண், அந்த ரிட்டர்ன் டிக்கெட்டைக் குப்பை என நினைத்துக் கசக்கிக் கீழே போட்டான். ‘எப்படியும் நண்பன் வண்டியில் கூட்டிப் போய்விடுவானே, இது எதற்கு?’ என நினைத்தான்.

திடீரென மழை வந்தது. நிற்கும் என்று பார்த்தால், ஒரு மணி நேரமாகியும் விடாமல் பெய்தது. “என்கிட்ட ரெயின் கோட் இருக்கு, நான் வண்டியில வீட்டுக்குப் போயிடறேன். ரயில்வே ஸ்டேஷன் பக்கத்துலதான் இருக்கு. நீ ரயில்ல உன் வீட்டுக்குப் போயிடு’’ என்று சொல்லிவிட்டுக் கிளம்பினான் நண்பன். வருண் ஸ்டேஷனுக்குள் வந்தபோது மழை காரணமாக நிறைய பேர் ரயிலில் போக விரும்பி டிக்கெட் வாங்க நின்றிருந்தனர். பெரிய க்யூவில் நின்று டிக்கெட் வாங்க ஒரு மணி நேரமானது. தான் தூக்கி எறிந்த ஐந்து ரூபாய் ரிட்டர்ன் டிக்கெட்டின் மதிப்பு அப்போது அவனுக்குப் புரிந்தது.

எதையும் சின்ன விஷயம் என அலட்சியம் செய்யக்கூடாது!





# மதிப்பான வாழ்க்கைப் பாடங்கள்!

**ஒரு தந்தை தன் மகனுக்குக் கற்றுத் தந்த மதிப்பான வாழ்க்கைப் பாடங்கள் இங்கே...**

- நம்மைச் சுற்றி நடைபெறும் நிகழ்வுகளுக்கும், நம்மிடம் அடுத்தவர் பேசும் பேச்சுகளுக்கும் எதிர்வினை ஆற்றுவதிலேயே நம் பெரும்பாலான நேரம் செலவாகிறது. யாரோ ஒருவர் சொல்வதைக் கேட்டு எரிச்சல் அடையாதீர்கள். யாரையோ பார்த்துப் பொறாமைப்படாதீர்கள். ஏதோ இயலாமையில் கோபம் கொள்ளாதீர்கள். அச்சம் மனதை ஆக்கிரமிக்க விடாதீர்கள். எப்படிப்பட்ட சூழலிலும் உடனடியாக எதற்கும் ரீயாக்ட் செய்யாமல், ஆழ்ந்து யோசியுங்கள். அறிவுப்பூர்வமாக அலசி முடிவெடுங்கள்.
- காரணமே இல்லாமல் மகிழ்ச்சியும் வராது, துன்பமும் வராது. மன ஆரோக்கியம் இல்லாதவர்கள் மட்டுமே, காரணமே இல்லாமல் சிரிக்க முடியும். வாழ்வில் மகிழ்ச்சியை ஏற்படுத்துவதற்கான காரணங்களை எப்போதும் உருவாக்கிக்கொள்ளுங்கள். அர்த்தமுள்ள சந்தோஷத்தை அடையுங்கள்.
- எப்போதும் அவசரப்படாதீர்கள். ஒவ்வொரு விஷயமும் அதற்குரிய நேரத்தில்தான் முழுமை அடையும். ஒரு துறையில் நீங்கள் கற்றுக்கொள்ள நேரம் பிடிக்கும். அர்த்தமுள்ள ஒரு வேலையில் இறங்குவதற்கும் நேரம் எடுக்கும். மன உறுதியுடன் செயல்பட்டு ஓர் இலக்கை அடைவதற்கும் நேரம் எடுக்கும். பொறுமையுடன் காத்திருங்கள்.
- உங்களிடம் இருக்கும் மிகப்பெரிய சொத்து, உங்கள் மனம்தான். நீங்கள் புத்திசாலித்தனமாக உழைக்கவும், நம்பிக்கையுடன் முயற்சிகளை எடுக்கவும், வாழ்க்கையில் எல்லா வளங்களையும் பெறவும், ஆரோக்கியமான மனமே அடிப்படை. மனதை அமைதியாகவும் ஆரோக்கியமாகவும் வைத்திருப்பதற்குப் போதுமான நேரம் செலவிடுங்கள்.
- கற்றுக்கொள்வதை எப்போதும் நிறுத்தாதீர்கள். கல்லூரிப் படிப்பு முடிந்து, வேலையில் சேர்ந்ததும், தொழில் தொடங்கியதும் பலரும் தடிமனாக இருக்கும் தங்கள் பாடப் புத்தகங்களைத் தூக்கிப் போட்டுவிடுகிறார்கள். ஆனால், வாழ்க்கை முழுக்கக் கற்றுக்கொண்டே இருக்க வேண்டும் என்பது அவர்களுக்குப் புரிவதில்லை. இன்றைய தொழில்நுட்ப யுகத்தில், கற்றுக்கொள்ளாத பலரும் ஒதுக்கப்பட்டு விடுகிறார்கள்.
- திறமை இருப்பவர்களைவிட, தொடர்ந்து முயற்சி செய்பவர்களுக்கே வெற்றிகள் வாய்க்கின்றன. சரியான விஷயத்தைப் பொறுமையுடன் தொடர்ந்து முயற்சி செய்யுங்கள். சரியான பாதையில் செல்பவர்களின் வளர்ச்சியை எந்தச் சக்தியும் தடுக்காது.
- வேலை, தொழில் அல்லது வியாபாரத்தில் எது உங்கள் இலக்கு என்பதன் அடிப்படையில் வாழ்வைத் தேர்வு செய்யுங்கள். அமைதியான மனநிலையுடன் நிலையாக வேலை செய்பவர்களுக்குச் சராசரி வருமானம் நிலையாகக் கிடைக்கும். ஆனால், பெரிய உயர்வுகள் கிடைக்காது. தங்களை வருத்திக்கொண்டு உழைக்கத் தயாராக இருப்பவர்களே உயரங்களைத் தொட முடியும்.
- தேவையற்ற ஆசைகளைக் கட்டுப்படுத்துங்கள். வேலை, தொழில் அல்லது வியாபாரத்தில் ஒரு குறிப்பிட்ட இலக்கை அடைய வேண்டும் என நினைப்பது தேவையுள்ள ஆசை. வாழ்க்கையில் உயர்வு வருவதற்கு முன்பே காஸ்ட்லி கார் வாங்குவது, வெளிநாட்டுச் சுற்றுலா போவது என இருப்பது தேவையற்ற ஆசை. இந்த வலையில் விழாமல் இருப்பவர்களுக்கே வாழ்வில் வெற்றி வாய்க்கும்.



Owned, Published by K.R. NAGARAJAN, Published from 10, Sengunthapuram Mangalam Road, TIRUPUR - 641 604 &
Printed by B. ASHOK KUMAR at RATHNA OFFSET PRINTERS, 40, Peters Road, Royapettah, Chennai - 600 014. Editor : T.J. GNANAVEL




SUKRA SUPER FINE COTTON VESTS | ROMEX SUPERIOR BANIANS | RISE-UP PREMIUM BANIANS | ACOSTE LUXURY INNERWEARS | Breeze Eye Let Vests | WinStripe STRIPED BANIANS | ARCHERY GYM VEST | COMPACT PREMIUM COTTON RIB VESTS | LITTLE STARS KIDS INNERWEARS

Available at Ramraj Showrooms and All Leading Textile Shops | Shop Online at www.ramrajcotton.in

Venmai Monthly - Postal Registration No.TN/TRU/28/2025-27. Registered with the Registrar of Newspapers for India under No.TNTAM/2016/68519. Day of Publishing 01-04-2026. Posted at Tirupur BPC on 5th of every month.

